1950 THE MADURA TAMIL SANGAM 4235 (7)

முருகா

திருப்புகழமிர்தம்

விக்ருதி மாத வெளியீடு ஆனி

சிவத்திரு. **மல்லையதாஸ் பாகவதர்** அவர்கள்
(திருப்புகழமிர்தம் ஆசிரியரின் தந்தையார்)
முத்து விழா 29—6—50ல் நடைபெறும்.

ஆசிரியர்

கிருபானந்தவாரி

விலை] [அணா 3

உ

முருகா

முத்து விழா

திருப்புகழமிர்தம் ஆசிரியரவர்கள் தந்தையார் புராணேதிகாச பாரங்கதர் சிவத்திரு மல்லையதாஸ் பாகவதர் அவர்களுக்கு நாளது விக்ருதி ஆனி 15ம் நாள் (29—6—50) வியாழனன்று முத்துவிழா (சதாபிஷேகம்) நடைபெறும். சிவ ஸ்ரீ ஈசான சிவாச்சாரியாரவர்கள் தலைமை தாங்குவார்கள். முன்னாள் (28—6—50) மாலை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதையரவர்களும், புரிசை திரு. சு. முருகேச முதலியாரவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள். முத்துவிழாவன்று மாலை இசையரசு திரு. M. M. தண்டபாணி தேசிகரவர்கள் இசையரங்கும், இரவு திருவிடைமருதூர் நாதசுர வித்துவான் திரு. வீருசாமி பிள்ளையவர்கள் நாதசுரக் கச்சேரியும் நிகழும்.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அவதார நல்விழா

விக்ருதி ஆனி 15-ம் நாள் (29—6—50) வியாழக்கிழமை.

மூவர் தேவாதிகள் தம்பிரானும் முருகவேள் புகழை உலகமுய்ய உதவிய வள்ளல் ஸ்ரீ அருணகிரிப் பெருந்தகையின் அவதார நல்விழா கீழ்க்கண்ட இடங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

1. காங்கேயநல்லூர் (காட்பாடி அருகில்) (18-வது ஆண்டு) காலை பாலாற்றிலிருந்து பாற்குடம் எடுத்து பகலில் அபிஷேக அலங்கார ஆராதனைகளும் இரவு ஆண்டவன் திரு வீதி பவனியும், காங்கேயநல்லூர் திருப்புகழ் சபைத் தலைவர் திரு. மல்லையதாஸ் பாகவதர் அவர்களால் நடைபெறும்.

2. மோகனூர் காந்தமலை (கரூர் சமீபம்) (11-வது ஆண்டு) ஆனி 15 உ காலை 7 மணி காவிரியிலிருந்து பாற்குடம் காவடி எடுத்தல்; 10 மணி அபிஷேக ஆராதனை; 12 மணிக்கு பிரசாதம் வழங்கல்; விரிவுரைகள்: கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர் அவர்கள் தலைமையில்: மாலை 4 மணி தலைவரால் "பெரும்பெயர் முருகன்"; 5-30 மணி கலைமகள் துணை ஆசிரியர் வித்வான் மோ. ஸ்ரீ செல்லம் அய்யர் அவர்கள் "கந்தர் அநுபூதி"; 6-30 மணிக்கு ஸ்ரீ கு. நா. சிவராமகிருஷ்ணன் அவர்கள், "மலையம்". இரவு 10 மணிக்கு குழிக்கரை ஸ்ரீ பிச்சையப்ப பிள்ளை அவர்களின் மேளக்கச்சேரியுடன் ஆண்டவன் திரு வீதியுலா.

ஆனி 16உ காலை 10 மணி அபிஷேகம்; மாலை 5 மணி மதுரை ஸ்ரீலஸ்ரீ மாரியப்ப சுவாமிகள் இன்னிசையரங்கு; இரவு 10 மணிகு திருமுருக கிருபானந்தவாரியவர்களால், "பச்சைப் புயல் மெச்சந்தகு பொருள்" என்பது பற்றி விரிவுரை.

3. வயலூரில் (திருச்சிராப்பள்ளி யருகில்) பல அன்பர்களாலும், மதுரையில் திருப்புகழ்ச் சபையாராலும் இனிது கொண்டாடப்பெறும்.

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்

மலர்	விக்ருதி ஆண்டு ஆனித் திங்கள்	இதழ்
15	ஜூன்-1950	3

திருப்புகழ்

(பொது)

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்-
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட;

மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட-
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்;

கதைவி டாத தோள்வீம னெதிர்கொள்வாளியால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்-
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்;

உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்த்தி மாமாயன் மருகோனே-
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

பதவுரை

கதை விடாத தோள் வீமன் எதிர்கொள் - கதாயுதத்தை விடாது தோள்மீதுவைத்துள்ள வீமசேனனால் எதிர்க்கப்பட்டதும், வாளியால் நீடு – ஆயுதங்களினால் நீண்ட வலிமையுள்ளதுமாகிய, கருதலார்கள் மாசேனை பொடியாக – பகைவர்களுடைய பெரிய சேனையானது மாண்டு பொடி படும்படியும். கதறு காலிபோய் மீள – பயத்தினால் கதறும்படியான பசுக் கூட்டம் பயம் நீங்கி மீளும் பொருட்டும், விஜயன் ஏறு தேர்மீதில் – அர்ச்சுனன் ஏறியுள்ள தேரின் கண் இருந்து, கனகவேத கோடு ஊதி – பொன்மயமாய் வேத நாதத்துடன் கூடிய சங்கத்தை ஒலித்தவரும், அலை மோதும் உததி மீதிலே சாயும் உலக மூடு சீர் பாதன் – அலைகள் மோதுகின்ற கடலின் நடுவே கிடக்கின்ற உலகத்தை ஓரடியால் அளந்து மூடிய சிறந்த திருவடியையுடையவரும், உவணம் ஊர்தி-கருடவாகனரும் ஆகிய திருமாலின், மருகோனே - திருமருகரே! உதய தாமமார்பான - ஒளிபொருந்திய மாலை யணிந்த மார்புடன் கூடிய, பிரபுடதேவ மாராயன் உளமும் ஆடவாழ்—பிரபுட தேவ மகா மன்னனுடைய உள்ளமும் களிக்கும்படி எழுந்தருளியுள்ள தேவர் பெருமாளே - தேவர்கள் போற்றும் பெருமை மிகுந்தவரே! அதல சேடனார் ஆட – அதல உலகிலே வாழும் ஆதிசேடன் தனது பணுமகுடங்களை விரித்து ஆடவும், அகிலம் மேரு மீது ஆட – மண்ணுலகமும் மகாமேருகிரியும் மிகவும் ஆடவும், அபினகாளி தான் ஆட – சிவத்திற்கு அன்னியமில்லாதவளாகிய காளிதேவி ஆடவும், அவளோடு - அக்காளிதேவியுடன், அன்று - அந்நாளில், அதிர வீசி வாது ஆடும் விடையில் ஏறுவார் ஆட – உலகமெல்லாம் அதிரும்படி கரசரணங்களை வீசி வாதுபுரிந்து திருநடனம் புரிந்த சிவமூர்த்தி இடபவாகனத்தின் மீது ஆடவும், அருகு பூத வேதாளம் அவை ஆட – தேவரீரது பக்கத்தில் பூதவேதாளங்கள் யாவும் ஆடவும், மதுரவாணிதான் ஆட – இனிய வீணுகானம்புரியும் கலைமகள் ஆடவும், மலரில் வேதனார் ஆட - தாமரைமலர் மீது வாழுகின்ற பிரமதேவர் ஆடவும், மருவு வானுளோர் ஆட - உமது திருவடியைச் சார்ந்துள்ள தேவலோக வாசிகளாகிய அமரர்கள் ஆடவும், மதி ஆட – சந்திரன் ஆடவும், வனசமாமியார் ஆட – தாமரைக் கோயிலில் வாழும் உமது மாமியாராகிய இலக்குமி தேவியாடவும், நெடிய மாமனார் ஆட – நீண்ட வடிவுடைய மாமனாராகிய நாராயணமூர்த்தி ஆடவும், மயிலும் ஆட - மயில் வாகனமும் ஆடவும், நீ ஆட – அதன்மீது தேவரீரும் ஆடி, வரவேணும் – வந்தருளவேணும்.

பொழிப்புரை

கதாயுதத்தை எப்போதும் தோள் மீது வைத்திருப்பவனாகிய வீமசேனனால் எதிர்க்கப்பட்டதும், ஆயுதங்களால்

மிகுந்த வலிமையுள்ளதுமாகிய பகைவர்களுடைய சேனைகள் அழியுமாறும், பயத்தினால் கதறுகின்ற பசுக் கூட்டங்கள் அச்சம் நீங்கி மீளும் பொருட்டும், பொன்மயமான சங்கத்தை (புல்லாங்குழலை) ஒலித்தவரும், அலைகள் மோதுகின்ற கடலாற் சூழப்பெற்ற இப்பூமண்டலத்தைத் தனது திருவடியினால் அளந்து மூடியவரும், கருடவாகனத்தில் வருபவரும் ஆகிய திருமாலின் திருமருகரே! ஒளிமிக்க இரத்தின மாலையை யணிந்த பிரபுடதேவ மன்னர்பிரானுடைய மனமும் மகிழ்ச்சியினால் ஆடும்படி எழுந்தருளியுள்ள தேவர்கள் போற்றும் பெருமிதம் உடையவரே! அதல வுலகிலே வாழ்கின்ற ஆதி சேடன் தனது பணாமகுடங்களை விரித்து ஆடவும் மண்ணுலகமும் மகா மேருகிரியும் மிகவும் ஆடவும், சிவத்தை விட்டுப் பிரியாதிருக்கின்ற காளிதேவி ஆடவும், அக்காளியுடன் முன்னால் உலகம் அதிர கையையும் காலையும் வீசி வாது புரிந்த நடராஜமூர்த்தி இடபவாகனத்தின்மீது ஆடவும், இனிய வேணுகானம் புரியும் கலைமகள் ஆடவும், பூரண சந்திரன் ஆடவும், உமது மாமியாராகிய இலக்குமியும் மாமனாராகிய திருமாலும் ஆடவும், மயில் தனது தோகையை விரித்து ஆட அதன் மீது தேவரீர் ஆடிக்கொண்டு வந்து அருள்புரிவீர்.

விரிவுரை

பாடலின் தோற்றம்:—

இத்திருப்புகழ் அருணகிரிநாதருடைய வரலாற்றின் ஒரு பகுதியைக் குறிக்கின்றது.

திருவண்ணாமலையில் அருக சமயத்தைச் சேர்ந்த சம்பந்தாண்டான் என்பான் ஒருவன் இருந்தான். அவன் அருணகிரிநாதருடைய அளவற்ற புகழைக் கண்டு அழுக்காறு கொண்டான். அப்பொழுது திருவண்ணாமலையை யரசுபுரிந்த பிரபுடதேவ மன்னன் முன் இருவருக்கும் வாது நிகழ்ந்தது. தனது வழிபடு கடவுளைச் சபையில் வரவழைத்துக் காட்டுவதாகவும், அதுபோல் அருணகிரியாரும் காட்டுதல் வேண்டும் என்றும் சம்பந்தாண்டான் வாதிட்டனன். அருணகிரிநாதர் அதற்கு இணங்கினார்.

இரவு முழுவதும் அபிசார ஓமம் புரிந்தும், வாய் வருந்த அழைத்தும் சம்பந்தாண்டானது வழிபடு மூர்த்தியாகிய காளி

தேவி வந்தாளில்லை. அதனால் சம்பந்தாண்டான் படு தோல்வியுற்றான். பிரபுடதேவ மன்னன், தனது அமைச்சர் புரோகிதர் அறிஞர் முதலியோர் சூழ திருக்கோயிலுக்குச் சென்று, ஆங்கு திருக்கோபுரக் குடவரையில் தியானபரராக வீற்றிருக்கும் அருணகிரியாரை அஞ்சலி செய்து, "அருட்கொண்டலே! சம்பந்தாண்டான் காளி தேவியைத் தருவித்துக் காட்டுந் திறனின்றித் தோற்றனன், கருணைகூர்ந்து எந்தை கந்தவேளை வரவழைத்து அடியேங்கள் உய்யும் பொருட்டுக் காட்டியருள வேண்டும்" என்று வேண்டிநின்றனன்.

அருணகிரிநாதர் "கந்தவேளை எந்த வேளையுங் காணலாம்; எங்கே நினைக்கினும் அங்கே என் முன் வந்து எதிர்நிற்பன்" என்று கூறி சிவகங்கையில் முழுகி, சிவகங்கைக்கரையில் இருக்கும் பதினாறுகால் மண்டபத்தின் ஈசானத்தூண் அருகில் நின்று, "ஐயனே! முன் ஒரு முறை பிரகலாதர் பொருட்டு திருமால் தூணிலிருந்து வெளிப்பட்டனர்; இப்போது அடியேன் பொருட்டுக் கருணைவடிவான தேவரீர் இத்தூணிலிருந்து வெளிப்பட்டுக் காட்சி தரவேண்டும், என்று துதித்து, "எந்தத் திசையினும்" "கொடிய மறலியும்" "இருவர்மயலோ!" என்ற திருப்புகழ்ப் பாக்களைப் பாடி இறுதியில் ஆண்டவன் இன்ன இன்ன மூர்த்திகளுடன் ஆடிக்கொண்டுவந்து காட்சி தரவேண்டும் என்று "அதல சேடனாராட" என்ற இத்திருப்புகழைப் பாடினார். அவ்வண்ணமே அறுமுகப் பரமன் வந்து காட்சிதந்தருளினார்.

"சயில மெறிந்தகை வேற் கொடு
 மயில் மிசை வந்தெனை யாட்கொளல்
 சகமறியும்படி காட்டிய பெருமாளே'

என்று அடிகளார் பாராட்டினர்.

இது சொற்சுவையும் பொருட்சுவையும் ஒருங்கே யமைந்த தேனினும் இனிய தெய்வ மணங்கமழுந் தீஞ்சுவைப் பாடல்.

அதல சேடனாராட:—

அதலவுலகிலேவாழுகின்ற அறிவின் மிக்க ஆதிசேடன் தேவரீருடைய ஆறு திருமுடிமீது வெய்யில் தாக்காவண்ணம் ஆயிரம் பணமகுடங்களை விரித்து, ஆயிரம் நாகரத்தினங்களும் ஆயிரம் சிறு ரத்தின தீபங்களாக வரிசையாக ஒளி செய்ய இனிது ஆடிக்கொண்டு வரவேண்டும். அறிவின் மிக்கவ

ராதலின் சேடன் என்று வாளா கூருமல் "சேடனுராட" என்று கூறியருளினுர்.

அறிவிலே சிறந்தவர் சேடனுர் என்பதனை, ஆதிசேட அவதாரமாகிய பதஞ்சலி முனிவர் யோக சூத்திரம் செய்தத ஞல் அறிக. பாணினி செய்த வியாகரணத்திற்குப் பாஷ்யம் எழுதியவரும் பதஞ்சலியே என்க.

இராமலிங்க அடிகளின் அறிவின்றிறத்தை நோக்கி ஒரு புலவர் கூறும் துதிப்பாடலிலும் ஆதிசேடனைச் சிறப்பித்திருப் பதைக் காண்க.

அகத்தியனே வால்மிகியோ ஆதிசேடன் றானே
மகத்துவமார் சம்பந்த மாலோ—சகத்திலகு
சச்சிதா னந்தத்தின் தண்ணளியோ என்னென்பேன்
மெச்சுமதி ராமலிங்க வேள்.

அகில மேரு மீதாட:—

அகிலம்—பூமி.

பூமியும் மேருவும் ஆடவேண்டும். என்கின்றுர். ஏன்? யாண்டும் நீக்கமற நிறைந்த நிமலன் ஆடுவதனுல் மண்ணும் விண்ணும் மலையும் ஆடும் என்பது கருத்து. சராசரங்கள் ஆட அவன் ஆடுகின்றுன்.

அபின காளி தானுட:—

பின்னம் - வேற்றுமை. அபின்னம் - வேற்றுமையின்மை சிவத்துடன் வேறு படாத காளி. எந்தக் காளி முருகவேள் உடனே வருவதற்கு, சம்பந்தாண்டான் வேண்டிய வரத்தி ஞல் சிறிது தடைபுரிந்தனளோ அந்தக் காளியும் ஆடிக் கொண்டு வருக.

அவளோடன்றதிர வீசிவாதாடு விடையிலேறுவாராட:—

அந்தக் காளி ஆடினுல் உலகமெல்லாம் அழியும். அதி ஞல் முன்னொருநாள் திருவாலங்காட்டிலே அவளுடன் கண்ட தாண்டவமாடி அவள் தருக்கைச் சிவபெருமான் அடக்கியருளி ஞர். எனவே இப்போது காளியாடும்பொழுது அவள் நடனத் திற்கு இணங்க நடராஜமூர்த்தியும் ஆடிக்கொண்டு வருவா ராக.

அருகுபூத வேதாள மவையாட:—

இறைவனுடைய அழகிலே பூத வேதாளங்கள் இருந்து இறைவனுடைய கீதங்களை ஓதும், இசையுடன் பாடும்; திருப்புகழை முழக்கும்; சங்கீதக் கருவிகளை ஒலிக்கும்.

காலமாருத வராளி சிகண்டிகை
பால சீகாமர மானவி பஞ்சிகை
கவுட பயிரவி லளிதை கயிசிகை
கவுளி மலகரி பவுளிஇசைவன
கனவ ராடிய ரும்பட மஞ்சரி
தனத னுசிவி தம்படு பஞ்சமி
கைச்சுலவு கோன்முறைவி தித்தரா கத்தடைவி
லுச்சமது சாதிகள்ள டுத்துமேல் எட்டுவன
கஞ்சக் கஞ்சநற் றேசி ராஞ்சிகு
றிஞ்சிப் பண்குறித் தியாழை யேந்துவ
கற்ற வுடுக்கையி டக்கை களப்பறை
மத்தளி கொட்டிய முற்றும்அ டிப்பன
காரெனமு ழங்குகுர லேறுதுடி சந்த்ரவளை
வீரமுர சுந்திமிற டாரிகுட பஞ்சமுகி
கரடிபறை யங்கனந் தங்கோடி கொட்டுவன
முறைமுறை கவந்தமின் றெுன்றோடு கிட்டுவன
கசரதப தாகினிய ரக்கர்துணி பட்டுவிழு
களமுழுதும் வாழியதி ருப்புகழ் முழக்குவன
கடியகு ணத்த சினத்த சகத்ரயோசனை
நெடிய கழுத்த சுழித்த பார்வைய
காதநு ருயிர கோடி வளைந்தன
பூதவேதாள மநேகவி தங்களே.

—பூதவேதாளவகுப்பு.

மதுரவாணி தானாட:—

முருகவேள் நடனஞ் செய்துகொண்டு எழுந்தருளிவரும் பொழுது வீணை முதலிய கானங்கள் இன்றியமையாதனவாகும். ஆதலின் கலைமகள் மகரயாழ் வாசித்துக்கொண்டு அவளும் ஆடிக்கொண்டு வருக.

மலரில் வேதனுராட:—

வேதகீதங்களை இனிது ஓதிக்கொண்டு பிரமதேவர் ஆடிக் கொண்டு வருக.

மருவுவானு ளோராட:—

மருவுதல்—இறைவனுடைய திருவடியைச் சார்தல்.

"மருவு மடியார்கள் மனதில்விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்"

என்று பிறிதொரு திருப்புகழிலுங் கூறுகின்றனர்.

தேவர்கள், தேவதேவதேவாதி தேவப் பெருமாளாகிய முருகவேளுடைய திருவடியைச் சார்ந்தவர்கள். ஆதலினால் இந்திரன் முதலிய இமையவர்கள் ஆடிக்கொண்டு வருக.

மதியாட:—

பதினாறு கலைகளுடன் கூடிய முழுமதி இனிய ஒளியை வீசிய வண்ணம் ஆடிக்கொண்டு வருக.

வனச மாமியாராட:—

மருமகன் ஆடிக் கொண்டு வருவதைக் கண்டு மகிழ வேண்டியவள் மாமியே யாதலினாலும், இலக்குமியில்லாத இடம் சிறப்படையாது ஆதலினாலும், திருமகள் ஒரு புறம் ஆடிக்கொண்டுவருக. வனஜம் என்ற சொல் வனசம் என்று வந்தது. வனம்-நீர்: ஜம்-பிறப்பு. நீரில் பிறப்பதனால் தாமரைக்கு வனஜம் என்ற பேர் உண்டாயிற்று.

நெடிய மாமனாராட:—

திருமாலுக்கு நெடியோன் என்ற ஒரு பேருண்டு.

"அமரர்பசிகெட உதவிய க்ருபை முகில்
அகில புவனமும் அளவிடு குறியவன்
அளவு நெடியவன் அளவிட அரியவன் மருகோனே"
—திருப்புகழ்.

"தீண்டாத கற்புடைய செழுந்திருவைத் துகிலுரியச்
செயலொன்றின்றி
நீண்டானே கரியானே நிமலாவென்
றரற்றினவராய் நின்று"
—மகாபாரதம்.

காளிங்கன் மீது நின்று திருநடனம் புரிந்தவராதலின் அவரும் மருகராம் முருகருடைய திருநடனத்தைக் கண்டு மன மகிழ்ந்து ஆடிக்கொண்டு வருவாராக.

மயிலுமாடி நீயாடி வரவேணும்:—

பறவைகளுக்குள் ஆடுகின்ற வன்மை மயில் ஒன்றுக்கே யுண்டு. தோகையை விரித்து ஓகையுடன் மயில் ஆடுகின்ற பொழுது அழகு ஒளிவிட்டுத் திகழும். மயிலும் ஆட அதன் மீது குழந்தைக் குமரவேளும் ஆடும் பொழுது அக்காட்சியின் எழிலை யாரே அளவிட வல்லார். அத்திருக்காட்சியை நேரே காணும் பேறு பிரபுடதேவ மன்னன் பெற்றனன்.

இவ்வாறு அருணகிரியார் பாடியவுடன் முருகவேள் இத்தனை பரிவாரங்களுடன் வந்து பிரபுட தேவன் முதலிய அனைவருங் காணக்காட்சி யளித்தனர்.

கனக வேத கோடு:—

கோடு—சங்கம், மூங்கில்.

மாசேனை பொடியாக சங்கத்தையும், கதறு காதலிபோய் மீள புல்லாங்குழலையும் திருமால் ஊதினார். கோடு என்ற சொல் இரட்டுற மொழிதல் என்ற உத்தி என உணர்க.

உலகமூடு சீர் பாத:—

மாவலிபால் மூவடி மண் கேட்டு, திரிவிக்கிரம வடிவங் கொண்டு, உலகையெல்லாம் தனது திருவடியால் மூடி திருமால் அளந்தனர்.

"மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்டகூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்" —அலங்காரம்.

உதயதாம மார்பான பிரபுடதேவ மாராஜ னுளமு மாடவாழ்:—

பிரபுட தேவன் அருணகிரிநாதர் காலத்தில் திருவண்ணாமலையை அரசாண்ட மன்னன், இவன் பொருட்டு இறைவனை அருணகிரியார் கந்தச்சபையினில் வரவழைத்தனர்.

அக்காட்சியைக் கண்ட மன்னனுடைய உள்ளம் மகிழ்ச்சியின் மிகுதியால் ஆடியது. ஈசான திசையில் உள்ள தூணிலிருந்து முருகவேள் வெளிப்பட்டுக் காட்சியளித்தனர். ஆதலின் அத்தூணைக் கர்ப்பக்கிரகத்தில் அமைத்து ஒரு திருக்

கோயிலை பிரபுடதேவ மன்னன் புதுக்கினன். அக்கோயில் திருவண்ணுமலையில் இன்றுங் காண விளங்குகின்றது. சிவகங்கைக் கரையில் ஆயிரங்கால்மண்டபத்திற்குத் தென் திசையில் கம்பத்திளையனுர் கோயில் என்று இது அன்பர்கள் அனைவரும் வழிபட மிக அழகாகத் திகழ்கின்றது. திருவண்ணுமலைக் கோயிலில் நுழைந்தவுடன் முதலில் காட்சியளிக்கின்றது.

"வெற்றிப்
பிரபுடதேவக் குரிசில் பேணி எதிர்காண
முருகன் மயில்மேல் முடுகி—வரவழைத்து
வந்ததுகாண் செவ்வேள் வரிசை யலங்காரமுற்றுந்
தந்ததுகாண் பேரின்பஞ் சார்ந்ததுகாண்" —தணிகையுலா.

உவணமூர்த்தி மாமாயன் மருகோனே! வாழ்தேவர் பெருமாளே! பிரபுடதேவ மாராயன் உளமுமாட மயிலுமாடி நீயாடி வரவேணும் என்று கொண்டு கூட்டிப் பொருள் செய்யினும் பொருந்தும்.

கருத்துரை

திருமால் மருகரே! பிரபுடதேவன் காண தேவரும் மூவரும் சூழ மயிலுமாட தேவரீரும் ஆடி அருட் காட்சி தர வந்தருளுவீர்.

திருப்புகழமிர்தம் வாழ்த்துப் பாக்கள்

சீரா ருலகி லருணகிரிச் செல்வன் செவ்வேள் திருவடியார்
பாரோர் மகிழத் திருப்புகழாம் பண்பார் பசுவைப் பரிந்தளித்தார்
ஏரார் பசுவை யிதமேவ யினிதாய்க் கறந்து மெங்கெங்கும்
ஆரா வமுதா யளித்தருக வன்பர் கிருபா னந்தரரோ!

அறிதற் கரிதாம் பொருளுணர்த்தி யாசான்முருக னருள் பொருத்தி
நெறியை யுருவாய் மிகவிருத்தி நெஞ்சங்கனிய நடைதிருத்திப்
பெறுதற் கரிய பேறுபெறப் பிணிகள் வினைகள் மலம்நீக்கும்
பொறுமைக் கொருமா மலைவாரிப் புனித னமிர்தப் போதனையே.

போதம் பொருந்தும் புகழமிர்தம் பொற்பார் குமர குருபரனுர்
கீதம் பொருந்தும் மலரடிகள் கிருபா னந்த வாரிமிக
நீதம் பொருந்தும் சிவநேசர் நெகிழ வுள்ளந் திருமுறையாம்
வேத முழங்கத் திருநீறு விளங்கி வாழ்க வாழ்கவரோ!

"பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கும் அடியேன்"

சி. சிவசுப்பிரமணியபிள்ளை
புளியங்குளம்

உ

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம்

திருநாவுக்கரசு நாயனுர் புராணம்

விளக்கம்

(௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தொண்டு

திருநாவுக்கரசனுர், சிவபெருமானுடைய திருவருள்பெற்று, அத்துடன் அமையாது மனம் வாக்கு காயம் என்ற மூன்று கரணங்களாலும் ஓவாது உள்ளன்புடன் திருத்தொண்டு புரிந்தனர். திருவருள் பெற்ற சிவஞானிகளும் தொண்டு செய்தல் அவசியமாகும். என்னை? வாசனுமலம் தாக்காதிருக்கும் பொருட்டும், இறைவனுடைய நன்றியை மறவாதிருக்கும் பொருட்டும், ஏனையோர் அது கண்டு உய்யும் பொருட்டும் என்க.

"வித்தகம் பேசவேண்டாம் பணிசெய வேண்டும்" என்று ஆரூருடைய நம்பியை நோக்கி இறைவர் கூறியதையும் உய்த்துணர்க,

செம்மலர் நோன்ருள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே. —சிவஞான போதம்.

"கோயில் வழிபாடும், தோத்திரம் புரிதலும் கீழ் நிலையில் உள்ளோர்கள் செய்ய வேண்டியன. மேல் நிலையடைந்த எமக்கு அவை வேண்டா" என வாய் வேதாந்தம் பேசிச் சோம்பிக் கிடக்கும் வெற்றுரையாளர் நன்றிகொன்ற பாவத்தையடைவர் என்பதையறிக.

"சொல்லொன்று செயலொன்று"

திருநாவுக்கரசு நாயனுர் சைவசமயத்தினின்றும், சமண்சமயம் புகுந்தனர். தருமசேனர் என்ற பேரைத் தாங்கினர். சமண் சமயத்தை யாண்டும் பரப்பினுர். அப்போது சைவ சமயிகள் அவர் மீது முனிவுகொண்டு அவருக்குத் தீங்கு செய்தார்களில்லை. ஏன்? எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு, அச்சமயங்களுக்குத் தலையாக விளங்குவது சைவம். "யாதொரு தெய்வங் கொண்டீர், அத் தெய்வமாகி

யாங்கே மாதொரு பாகனூர் தாம் வருவர்'' என்னும் பரந்த நோக்கமுடையவர்கள் சைவர்கள். கருணையென்னும் அங்கியை அணிந்தவர்கள்; சொல் வேறு செயல் வேறு இன்றி, சொல்வதுபோல் செய்துகாட்டுபவர்கள்.

திருநாவுக்கரசர் சூலைவலி தீரப்பெறுது உய்வகை கருதி சைவஞ் சார்ந்தனர். அது கண்ட சமணர்கள் அடங்காத சீற்றங் கொண்டார்கள். ''நாங்கள் கொலை புரியோம்; பொய்யுரையோம்'' என வாய்ப்பறையறையும் அவர்கள், நாவுக்கரசர் மீது பல பழிச் சொற்களைக் கூறி, நீற்றறையிலிட்டும், நஞ்சூட்டியும், மதயானையை ஏவியும், கல்லிற் கட்டி கடலிற் பாய்ச்சியும் கொலைத் தொழிலை அஞ்சாது புரிந்தார்கள்.

''கொலையும் பொய்ம்மையும் இலம் என்று கொடுந்தொழில் புரிவோர்
தலையும் பீலியுந் தாழவந் தொருசிறை சார்ந்தார்''

சொல்லொன்று செயலொன்றாக சமணர்கள் நின்றனர்.

அஞ்சாமை

திரிபுரம் எரித்த விரிசடைப் பரமனைப் பணியும் மெய்ம்மையடியார் ஒன்றுக்கும் அஞ்சிடார்.

நாவுக்கரசரை, மகேந்திரபல்லவனுடைய மந்திரிமார்கள் வந்து அழைத்தபோது, அந்த அரசனை ஒரு சிறிதும் மதியாமல்

''நாமார்க்குங் குடியல்லோம்''

என்று கூறிய ஞான வீர வசனங்கள் நம்மை வீறு பெறச் செய்கின்றன.

மிகவும் வெப்பமான நீற்றறையைக் கண்டும், கொடிய நஞ்சினையுண்டும், கோபாதிசயம் என்ற கொடிய யானையைக் கண்டும் சிறிதும் அஞ்சினாரில்லை.

''திண்ணன் கெடிலப் புனலுமுடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்று மில்லை
அஞ்சவருவது மில்லை''

என்று கூறிய அடிகளாரது அஞ்சாமை எத்துணை விழுமியது என்பதை உற்று நோக்குமின்.

கல்லிற் கட்டி பயங்கரமான கடலில் இட்டபோதும் கலங்கினாரில்லை. ''நற்றுணையாகி, நாவினுக்கு அருங்கலமாய்

நின்று, பாவத்தை நண்ணிநின்றறுத்து, உற்ற நடுக்கத்தைக் கெடுத்து, நங்களுக்கு கருங்கலமாகி நலமிகக் கொடுப்பது நமசிவாயம்" என்று கூறிய வீரத்தை எம்மால் விளம்புதற் பாலதோ?

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற்றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இரு சுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே"

"அல்லல் என்செயும் அருவினை யென்செயும்?
தொல்லைவல்வினைத் தொந்தந்தான் என் செயும்?"

"அருளுடைமை"

திருநாவுக்கிறைவர் கருணையே வடிவானவர்; சமணர் பல தீங்குகள் செய்தும், தாம் அவர்கட்குத் தீங்கு நினைக்காமல் கருணையினால் சிவசிந்தையுடன் இருந்தனர். இந்த அஹிம்சை யின் ஒருபகுதிதான் இன்று காந்திஜீயினிடம் விளங்கியது.

அடிகளாரைக் கண்டு அதிகைவாழ் அடியார்கள்,

இந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை யமண்கையர்தீங்குவிளைக்கச் செற்றம்
உண்டாயின வண்ணம் எவ்வண்ணம்?

என்று அதிசயித்து உரைத்தனர்.

பல இடர்களை விளைவித்த மகேந்திர பல்லவன் மனந் தெளிந்து, சமணரை வெறுத்து, வாகீசப் பெருந்தகையின் மலரடி மீது வீழ்ந்து வணங்கினான். அப்பொழுது அருள்வடி வாகிய அடிகள் அவனை வெகுளாது, வெறுக்காது, சேயை அணைக்குந் தாய் போல் அணைத்து அருள்புரிந்தனர்.

பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

—மாதவச் சிவஞான யோகிகள்.

"உடற்றூய்மையும் இன்றியமையாததே"

திருநாவுக்கரசு நாயனார், முன்னே திருவதிகையில், தமது தமக்கையார் திலகவதியார் ஐந்தெழுத்து ஓதிக் கொடுத்த திரு நீற்றைப் புனைந்து, உள்ளந் தூய்மையுற்றார். அதிகையரனு ரால் ஆட்கொள்ளப் பெற்றார். அதுவே அமையும். ஆனால் அடிகள் அத்துடன் அமைந்தாரில்லை. பரசமயத் தொடக்

குண்டு வளர்ந்த தமது உடம்பு தூய்மையுறவேண்டும்" என்று தூங்கானை மாடமேவிய சோதியை வேண்டினர். இறைவர் ஒரு சிவபூதத்தை யனுப்பி அப்பரடிகளுடைய இரு தோள்களிலும் இடப முத்திரையும், திரிசூல முத்திரையும் இட்டு உடல் தூய்மை செய்து அருள்புரிந்தனர்.

வைணவ சமயத்திலும் முத்திராதாரணம் என்ற ஒரு சடங்கு இருப்பது கண்கூடு.

இதுவேயுமன்றி, திருநல்லூரில் திருவடி தீட்சையும் இறைவரை வேண்டிப் பெற்றனர்.

"அப்பர்"

திருவருள் முழுதும் பெற்ற திருநாவுக்கரசர், அமுது அம்மை முலைப்பாலுண்ட சீகாழிப் பிள்ளையாரைப் பற்றிக் கேள்வியுற்றதுங் காணவிழைந்து சீகாழியுற்றார். திருஞான சம்பந்தர் இவருடைய வருகையைக் கேட்டு எதிர்கொண்டனர். சம்பந்தர் தம்மைப் பணிந்த அடிகளை எடுத்துத் தாம் இறைஞ்சி, அன்புகனிய "அப்பரே!" என்று அழைத்தனர்.

அப்பொழுது இரு குருநாதர்களும் கலந்த காட்சியை எமது பிரபு சேக்கிழாரேயன்றி யாவரே கூறவல்லார்?

அருட்கடலும் அன்புக்கடலும் ஒக்கும்; சைவசமயத்தின் இரு திருக்கண்களை ஒக்கும்; இறைவர் திருவருளும் இறைவி திருவருளும் ஒக்கும்.

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமா மெனவும்; ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும்; புவன முய்ய
இருட் கடுவுண் டவரருளும் உலகமெல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவுங் கூடித்
தெருட்கலை ஞானக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடை வானவர் கோயில் சேர்ந்தாரன்றே.

அற்புதச் செயல்:—

அப்பூதியார் அரவந்தீண்டி மாண்ட மகனை மறைத்து வைத்து அமுதுபடைக்க, அதனை திருவருட் குறிப்பினால் அப்பரடிகள் அறிந்து மூத்த திருநாவுக்கரசு எங்கே என்று கேட்டதும், மாண்ட மைந்தனை தேவாரப்பதிகம் பாடி மீண்டும் எழு

மாறு செய்ததும், திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றதும் திருமறைக்காட்டில் கதவு திறக்கப்பாடியதும் அளவு படுத்த முடியாத அற்புதச் செயல்கள் என்று அறிக.

கொல்கரியில் நீற்றறையில் நஞ்சில் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாக் கடல்நீந்தல்—நல்ல
மருவார் மறைக்காட்டில் வாயில் திறப்பித்தல்
திருவாமூ ராளி செயல். —திருக்களிற்றுப்படியார்.

"திருக்குறளுந் தேவாரமும்"

அருளாளர்கட்குத் தனித்தனியே தோன்றுங் கருத்துக்கள் ஒற்றுமையாகத் திகழும்.

இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

என்றார் திருவள்ளுவதேவர்.

இதே உவமானம் அப்பரடிகள் தேவாரத்திலும் மிக இனிமையாக வருவதைக் காண்க.

"கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூரரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த
கள்வனேனே"

திருக்கதவந் திறப்பித்தல்

திருமறைக் காட்டில் வேதங்கள் வழிபட்டு அடைத்து வைத்த வழி வழக்கிலின்றி வேறு வழியாய் அன்பர்கள் சென்று வழிபடுவதை யறிந்த அடிகள் திருப்பதிகம்பாடித் திறக்க முயன்றனர். பத்துப்பாடல் பாடியுங் கதவந்திறக்கப் படாதிருந்த காரணம், பாடலின் ஆற்றல் குறைவு அன்று; அதன் பயன் துய்ப்பான் வேண்டி இறைவர் சிறிது காலந் தாழ்த்தனர் என்று சேக்கிழாரே காரணங் கூறுவதை ஓர்க. அப் பண்ணின் பயன் அத்துணை இனிமையானது என்று தெளிக.

பாடுவார் பசிதீர்ப்பார்

வாகீசர் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும்போது பசியுந் தாகமும் எய்தி மிகமிகவருந்தியும், சிறிதும் மனம் வருந்தாது இறைவரைத் தெரிசிக்கவேண்டும் என்ற பெருவேட்கையுடன் செல்கின்றார்.

உ

முருகா

கற்பு

வள்ளி

(மணாளனைத் திருத்திய மங்கை)

வள்ளி:— எப்பொழுது பார்த்தாலும் பணம் பணம் என்றே திரிகின்றீர்கள். ஓய்வு ஒழிச்சல் என்பது சிறிதுங் கிடையாது. உடம்பு துரும்பாக இளைத்துவிட்டது. சுயமாகவும் தெரிகின்றதில்லை. சொன்னாலுங் கேட்கின்றதில்லை. வெளியே போய் கண்ட கண்ட இடமெல்லாம் அலைகின்றீர். வீட்டிற்கு வந்துங்கூட என்னுடன் மனங்குளிர்ந்து ஒரு வார்த்தை பேசுவதில்லை. நோட்டுகளை எண்ணுவதும் அடுக்குவதும், பெட்டியில் வைத்துப் பூட்டுவதும், கணக்கு எழுதுவதும்...ஐயோ? நல்ல வேலை செய்கின்றீர்...கொஞ்சநேரம் அசந்து தூங்குகின்றதுமில்லை. ஏன் இப்படி அலைகின்றீரோ? நான் சொல்லுகின்றது காதில் விழுகின்றதா? இல்லையா?

எச்சிலை விரலால் தொட்டுத் தொட்டு நோட்டுகளை எண்ணிக்கொண்டிருந்த கார்த்திகேயன் மனைவியை நிமிர்ந்துபார்த்து "பைத்தியமே! சத்தம் போடாதே. பேசாமல் போ. உன்

பரம கருணாநிதியாகிய பசுபதி வழியில் சோலையுங் குளமும் உண்டாக்கி, பசித்துவரும் பற்றற்ற அடியவர்க்குப் பொதிசோறு தந்து உண்பித்து இளைப்பகற்றினார்.

"ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக்கண்டு கட்டுச்
சோறெடுத்துப் பின்னே தொடர்ந்தனையே"

—இராமலிங்கர்.

தன்னை நினைந்து உருகிப் பாடும் அடியவருடைய உடற்பசியைத் தீர்ப்பதுடன் உயிர்ப்பசியாகிய ஆணவமலத்தினையும் மாற்றி இறைவர் அருள்புரிவர்.

திருக்கச்சூர் ஆலக்கோயிலுள் சுந்தரர் பசித்திருந்தபோது இறைவர் மனைதொறுஞ் சென்று இரந்து அமுதளித்த அருட்டிறமும் இங்கே நினைவு கூர்க.

(தொடரும்)

னுடன் உட்கார்ந்து பேசினுல் என்னடீ வரும்? "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" "அருளிலார்க்கு அவ்வுலகமில்லை" என்ற பழமொழியை நீ கேட்டதில்லையா? பணமில்லையானுல் உலகத்திலே என்ன காரியந்தான் ஆகும். "ஈட்டி எட்டினமட்டும் பாயும்; பணம் பாதாளமட்டும் பாயும்" பணமிருந்தால் அவனுக்கு இருக்கின்ற பெருமையே அலாதி. எங்கே போனுலும் "இங்கே வாரும், இங்கே வாரும்" என்று அழைத்து முதலிடந் தருவார்கள். அறிவு இல்லையானுலும் அவனைப் பெரியவனுக மதிப்பார்கள். ஏண்டீ! உனக்கென்னடீ தெரியும். பணத்திற்குத்தாண்டீ எல்லாப் பெருமையும்" என்றுன்.

வள்ளி:— ஆனுலும் உங்களுக்குப் பணத்திலே இவ்வளவு அழுத்தம் இருக்கக் கூடாது. நன்குக அறிந்த பெரியவர்கள் இந்தப் பணத்தை உடைந்துபோன கண்ணுடித் துண்டாக நினைத்து வெறுக்கின்றுர்கள்.

"சிறியரே மதிக்குமிந்த செல்வம்வந் துற்றஞான்று
வறியபுன் செருக்குமூடி வாயுள்ளோர் மூகராவார்"

என்று குசேல முனிவர் கூறியுள்ளார். அறிவுள்ளவரை உலகம் எப்போதும் மதிக்கும். பொருள் உள்ளவரை பொருள் விருப்புடைய சிலர் எதிரில்தான் மதிப்பது போல் நடிப்பர். காணுதபோது இகழ்வரேயன்றிப் புகழமாட்டார். கண்ட போது வஞ்சகமாகப் புகழ்வதை மெய்ம்மையாக எண்ணித் தனவந்தர்கள் தலைநிமிர்ந்து நிற்பார்கள். இறந்தால், இந்தக் காசுமேல் ஒட்டிய தூசுகூட வரப்போவதில்லை.

கார்த்திகேயன்:— கண்களை உருட்டி மனைவியைப் பார்த்து, நோட்டுகளை தொடைக்கு அடியில் அழுத்திக் கொண்டு, "அடியே! என்னடீ அளக்கின்றுய்? பணமில்லாதவன் பிணத்திற்குச் சமானமடீ. உனக்கென்னடீ தெரியும் பணத்தின் அருமை? ரொம்பத் தெரிந்தவள் மாதிரி பேசுகின்றுய். ஏண்டீ பணக்காரனுகிய என்னைக் கல்யாணஞ் செய்துகொண்டாய்? போய் ஒரு தரித்திர நாராயணனைக் கல்யாணஞ் செஞ்சுக் கொள்கின்றதுதானே? நீ கட்டிக்கொண்டிருக்கின்ற பட்டுச் சேலையும், தலையில் இருக்கின்ற ரிப்பனும், காதில் தகதக என்று சொலிக்கின்ற வைரத்தோடும் பணம் இல்லாமல் என்னமா வரும்? தெருவில் கிடக்கின்ற ஓட்டாஞ்சல்லியைத் தந்தால் வருமா? மகா ஞானிமாதிரி பேச வந்துவிட்டனையே, வாயை மூடிக்கொண்டு போடீ.

வள்ளி:— நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேளும். பணம் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. குடும்ப வாழ்க்கையிலே இருக்கின்ற நாம் பணம் இன்றி என்ன செய்வது? அது கூடவா எனக்குத் தெரியாது. நல்ல வழியிலே நாலுகாசு வந்தாலும் போதும். சும்மா பணம் பணம் என்று இரவு பகலாக அலையாதீர் என்றுதானே சொல்லுகின்றேன். பணத்தை வெறுமனே தேடிக்கொண்டேயிருந்தால் அதை அனுபவிப்பதுதான் எப்போது? சருகுகளைக் குவித்துக்கொண்டேயிருந்தால் குளிர் காய்வது எப்போது? ஒருவன் கடைசிவரை வீடுகட்டிக்கொண்டே யிருந்தான். கிருகப்பிரவேசம் செய்யவேயில்லை. அந்தப் பித்துக்கொள்ளிமாதிரியாகக் கூடாது. நிம்மதியாகச் சிறிது காலம் கடவுளைக் கும்பிட்டுக்கொண்டு இருங்கள்; நிறையப் பணத்தைச் சேர்த்துத்தான் என்ன பயன்? பெரிய பணக்காரர்கள் என்ன தங்க உருண்டையையா விழுங்குகின்றார்கள்? ஆயிரம் வேலி நிலம் படைத்தவன் வேளைக்கு ஐம்பதுபடி அன்னமா அருந்துகின்றான்? போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து மனிதனுக்குத் திருப்தி வேண்டாமா? யாரோ வருகின்றார்கள். நான் உள்ளே போகின்றேன்'' என்று வள்ளி பின்கட்டுக்குப் போனாள்.

கார்த்திகேயன் நோட்டுக்களை அப்படியே வாரி துண்டில் போட்டு மறைத்தான்.

தடித்த உருவமும், பளபளப்பான அங்கவத்திரமும் அணிந்து, கையில் தந்தப்பிடியுடன் கூடிய தடியுடன் வந்த அந்த ஆள், "கார்த்திகேயா! என்ன சௌக்கியமா? எங்கே ஊரிலேயே இருக்கின்றதில்லை? எப்பொழுது வந்தாய்?''

கார்த்திகேயன், "இன்றுதான் வந்தேன். நீதான் கண்ணில் படுவதேயில்லை. நான் இங்குதான் இருக்கின்றேன். எங்கே இவ்வளவு தூரம். என்ன வீட்டில் எல்லாம் சுகந்தானே. பையன் பரீட்சையில் தேறினானா? சோமுவுக்கு வரன் கிடைத்ததா?

வந்தவர்:— சும்மா உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்றுவந்தேன். வேறு ஒரு விசேடமுமில்லை. பையன் படிப்பு விஷயத்தைக் கேட்கவேண்டாம். கடைகால் வலிமையாகப் போட்டுக்கொண்டிருக்கின்றான். வரன் அவ்வளவு சீக்கிரம் எங்கே கிடைக்கின்றது. கார்த்தி! நிரம்ப அவசரம். ஒரு ஐம்பது

ரூபாய் கொடு. முதல்தேதி சம்பளம் வாங்கியவுடன் தந்து விடுவேன். உன்னை நம்பித்தான் வந்தேன். பழைய சிநேகிதனாகிய நீ ஒருவன்தான் எனக்கு எப்போதும் உதவி செய்கின்றாய். ஊரில் எல்லாஞ் சுத்தக் கஞ்சப்பயல்களாக இருக்கின்றார்கள். நாசமாய்ப் போவான்கள்; அவசரத்திற்கு ஒரு காலணா ஒருவனும் உதவுவதில்லை. அவசரம். சட்டுணு கொடு......

கார்த்திகேயன்...முகத்தைச் சிறிது சுளித்துக்கொண்டு, மறுபடியும் அதை மறைத்துச் சிரித்துக்கொண்டு, "சுப்பண்ணா! பணமா பெரிசு? மனுஷாள் குணந்தான் பெரிசு. முன் பின் இருந்ததைக் கவனித்து நடக்கவேண்டாமா? பணம் இன்றைக்குப் போகும். நாளைக்கு வரும். மனுஷாள் வருவார்களா? ஐம்பது என்ன? ஐநூறு கேட்டாலும் தருவேன். நீ வேறு நான் வேறா? இப்பொழுதுதான் வந்த பணங்களையெல்லாம் சேர்த்து மொத்தமாக சேட்டுக்குத் தரவேண்டிய பாக்கிக்குக் கொடுத்துவிட்டுவந்தேன். இப்பொழுது பண மார்க்கட்டு மெத்த டைட்டு என்பது உனக்குத் தெரியாதா? நீ கேட்டு நான் இல்லை என்று சொல்வேனா? கையிலே வைத்துக் கொண்டு இல்லையென்று சொல்லுகின்ற முட்டாள் பழக்கம் என் கிட்டே கிடையாது.

சுப்பண்ணா:—கார்த்தி! அப்படிச் சொல்லக்கூடாது. மெத்த அவசரம். உன் கிட்டே இல்லாத பணமா? போய்ப் பாரு; ஏதாவது ஒரு பக்கம் இருக்கும். வீட்டிலே வள்ளியம்மாகிட்டே இருந்தாலும் வாங்கிக்கொடு, முதல் தேதி மாலை 6 மணி டாண் என்று அடித்தவுடன் கொணர்ந்து கொடுத்துவிடுவேன். என்னை நட்டாற்றிலே விட்டுவிடாதே.

கார்த்திகேயன்:— சுப்பண்ணா! அப்படியெல்லாம் ஒன்றுஞ் சொல்லாதே. வா உன்னைக் கொண்டுபோய் வீட்டிலேயே விடுகின்றேன். நம்ம ஊரிலே ஆறே கிடையாது. ஒரு குடம் தண்ணீர் ஒரு அணாவுக்கு வாங்குகின்ற ஊரிலே நட்டாறு ஏது? கடவுள் சாக்ஷியாகச் சொல்லுகின்றேன். கையில் ஒரு சல்லி கிடையாது. வைத்துக்கொண்டே இல்லை யென்று கீழ்வாய்லக்கம் பாடுகின்ற மடையன் என்று என்னை நீ மதிக்காதே. நிறைந்த வீட்டிலே நின்று சொல்கின்றேன். காலணா கிடையாது. நீ சும்மா என்னைத் தொந்தரவு செய்யாதே, போ.

சுப்பண்ணா:—"கார்த்தி! நீ மனம் வைத்தால் எப்படியுந் தரலாம். நான் நாளை காலை வந்து பார்க்கின்றேன், எப்படி

யாவது ஒரு இருபத்தைந்தாவது கொடு. உனக்குக் கோடி புண்ணியம் வரும். நான் போய்வருகின்றேன்'' என்று வற்புறுத்திக் கூறிவிட்டுச் சென்றான்.

அவன் போனதும் கார்த்திகேயன் ஒரு பெருமூச்சு விட்டான். மெல்ல துண்டில் மறைத்துவைத்துள்ள நோட்டுகளை எடுத்து அடுக்கத் தொடங்கினான். வள்ளியம்மை வந்து, “என்னாங்க! அந்த மனிதன் பணங் கேட்டால் தருவதற்கு முடியாது என்று கண்டித்துச் சொல்லியனுப்பக்கூடாதா? என்ன? அவன் தலையை வாங்கிவிடுவானா? கடவுள் சாக்ஷியாகப் பணம் இல்லையென்றும், நிறைந்த வீட்டில் இருந்து சொல்லுகின்றேன் என்றும் இதற்கு எத்தனைச் சத்தியம் செய்வது? பணத்தைச் சம்பாதிக்கின்றபோதுதான் பல அசத்தியஞ் செய்கின்றீர். கைமாற்றுக் கேட்கும்போது கூடவா அசத்தியம். எதுக்காக இந்த அசத்தியம்? உள்ளதை உள்ளவாறு சொல்லுங்களேன்.

கார்த்திகேயன்:—“அடி அசடே! நான் எங்கேயடீ அசத்தியஞ் சொன்னேன்? சத்தியந்தான் சொன்னேன். அதை அறிய உனக்கு அறிவு ஏது? நான் என்னடீ சொன்னேன். கடவுள் சாக்ஷியாகக் கையில் ஒரு சல்லி கிடையாது என்று சொன்னேன். அதில் என்ன தவறு? என் கையில் சல்லி இருக்கின்றதா பார். இந்தத் துண்டிலும் பெட்டியிலும் நோட்டுக்கள் தானே இருக்கின்றன; ஏண்டீ! உனக்கு விளங்குகின்றதா? “நிறைந்த வீட்டிலிருந்து சொல்லுகின்றேன் காலணா கிடையாது'' என்றேன். அதில்தான் என்ன பிழை? காலணாவாக இருக்கின்றதா பார். கண்ணைத் திறந்து நன்றாகப்பார். எல்லாம், பத்தும் நூறுமாகத்தானே இருக்கின்றது. பேச்சில் உள்ள சூட்சுமத்தை யறியாமல் ஏன் நீ உளறுகின்றாய். போடீ, என் பேச்சில் உள்ள மர்மத்தையறிய அந்த மகாதேவனால் கூட முடியாது'' என்று சிரித்தான்.

ஒருநாள் கார்த்திகேயன் இம்பீரியல் பாங்கியில் ஐம்பதினாயிரம் ரூபாய் ட்ராப்டை மாற்றிவந்தான். 100 ரூபாய் நோட்டு நூறுகொண்ட ஒரு கட்டை அதிகமாகக் காஷ்யர் கைமறதியாகத் தந்துவிட்டார். (அதாவது பதினாயிரம் ரூபாய்) வீட்டில் கொணர்ந்து எண்ணிப்பார்த்த கார்த்திகேயனுக்கு அடங்காத ஆனந்தம். ஒரு சிரமமுமில்லாமல் பதினாயிரம் வந்துவிட்டதை எண்ணி எண்ணி உள்ளம் உவந்

தான். தலைகால் தெரியாத சந்தோஷம். பணத்தைப் பெட்டியில் வைத்துவிட்டு பெரிய கோட்டையைப் பிடித்த கொற்றவனைப் போல அமர்ந்திருந்தான்.

மாலை இருப்புத் திட்டங்கட்டும் பொழுது பதினாயிரங் குறைவதைக் கண்டு காஷ்யர் குமாரசுவாமி திடுக்கிட்டார். மனம் படபட என்று துடித்தது. பலமுறை பணங்களை எண்ணினான். பென்சிலைத் தலையில் தட்டி யோசித்துப் பார்த்தார். ஒன்றுமே விளங்கவில்லை தனது வாழ்வின் தலையில் இடிவிழுந்ததாக எண்ணித் துடித்தார். என்ன செய்வார் பாவம்? 'முருகா!' என்று பெருமூச்சு விட்டார். பாங்கு ஏஜண்டினிடம் தகவல் சொல்லி விசனப்பட்டனர். அவர் மிகவும் சீறி, "நாளை 4 மணிக்குள் பணம் வந்து உன்னால் சேர்க்கப்படவில்லையானால், நீ கட்டிவைத்திருக்கும் தொகை ஐயாயிரத்தைப் பறி முதல் செய்வதுடன் நீயும் அரஸ்ட் செய்யப்படுவாய்" என்று கடிந்தனர்.

காஷ்யர் குமாரசுவாமி தாங்கமுடியாத வேதனையுடன் தள்ளாடித் தள்ளாடித் தன் வீடு சேர்ந்தார். சென்றவர் மனைவியுடன் பேசவில்லை. குழந்தைகளுடன் விளையாடவில்லை. "முருகா! என்னை இப்படியுஞ் சோதிக்கலாமா? ஐந்து பெண் குழந்தைகளும் மூன்று ஆண் குழந்தைகளும், தளர்ந்த வயதுடைய தாய் தந்தையரும், கர்ப்பிணியான என் மனைவியும் ஏங்க நான் சிறை செல்லுவதா? தற்கொலை செய்துகொண்டாலும் அந்தப் பழி உனக்குத்தானே. கந்தா; கடம்பா! கருணாகரா! நக்கீரனைச் சிறையிலிருந்து ஆட்கொண்டவரே! என்னைச் சிறைபுகா வண்ணங் காப்பது உன் கடன். என் தாயே! வள்ளி நாயகி! தமிழ்த் தாயே! தவத்தனிச்செல்வியே! உன் குழந்தையாகிய என்னைக் காப்பாற்று" என்று அன்று இரவு முழுவதும் தூங்காது புலம்பிக்கொண்டிருந்தார்,

கவலையினால் காஷ்யருக்குத் தூக்கம் வரவில்லை. களிப்பின் மிகுதியினால் கார்த்திகேயனும் தூங்கவில்லை. பொழுது விடிந்ததும் வள்ளி விடியற்காலையிலேயே எழுந்து நீராடி முருகன் படத்திற்குப் பூசை செய்துவிட்டு, கணவனுக்குச் சூடாகக் காபி கொணர்ந்து கொடுத்தாள். அதை ஆற்றி ஆற்றி அவன் குடித்துக் கொண்டிருந்தான்.

தயிர்க்காரி வந்தாள். ஒரு அணாவுக்குத் தயிர் வாங்கிக் கொண்டு வள்ளி ஒரு ரூபாயைத் தந்து மிகுதியைக் கேட்டாள்.

தயிர்க்காரி எண்ணிக்கைத் தவறுதலாக 0—15—6 வைத் தந்து விட்டுக் கூடையை எடுத்துத் தலையில் வைத்துப் புறப்பட்டாள். சில்லறையை எண்ணிப்பார்த்த வள்ளியம்மை, "அம்மா! என்ன அரையணா கூடத் தந்துவிட்டாயே. இந்தா அரையணா! அடுத்தவர்கள் காசு வந்தால் நல்ல கதி கிடைக்குமா? நாம் பிறர் காசுக்கு ஆசைப்பட்டால் நம்ம காசு இன்னொருபக்கம் போய்விடும்'' என்று அரையணாவைத் திருப்பிக் கொடுத்து விட்டாள். தயிர்க்காரி சந்தோஷத்தோடு வாங்கிக் கொண்டு, "அம்மா! நீ நல்ல புண்ணியவதி; இந்தக் காலத்திலே கைதவறுத லாகத் தந்து விட்டால் வாங்கின பாவிகள் தருவார்களா? சண்டாளர்கள் அடுத்தவர்கள் பணத்துக்கு அலகையாய் பறக் கின்றார்கள். காலம் மிகவும் மோசமான காலம். நீ நல்லாக இருக்கணும். உனக்கு ஒரு குறைவும் வராது. என் குல தெய்வம் பொன்னியம்மா உனக்கு எல்லாப் பாக்கியத்தையும் தருவாள்'' என்று கும்பிட்டுவிட்டுச் சென்றாள்.

இவற்றைக் கேட்ட கார்த்திகேயன் மனத்தில் சிந்தனைப் புயல் வீசத் தொடங்கியது. அப்படியே சித்திரப் பதுமைபோல் சிறிது நேரம் இருந்தான். பின்னர் எழுந்து தெருத்திண்ணை யில் அமர்ந்தான். வீதியில் அகத்திக்கீரை விற்றது. கார்த்தி கேயன் ஒரு அணாவுக்கு அகத்திக்கீரை வாங்கிக் கொண்டு, மணிபர்சை எடுத்து, கலங்கிய சித்தத்துடன் இருந்தான் ஆத லின் அணாவுக்குப் பதில் கால்ரூபாயைத் தந்துவிட்டு உள்ளே சென்றான். கீரையை மனைவியிடந் தந்துவிட்டு வெளியே வந்தான். கீரை விற்றவன் அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

ஏண்டா! காசு தந்துவிட்டபின் ஏன் இங்கே மண்டபம் போல் நிற்கின்றாய்?

ஐயா! சில்லறை கவனப்பிசகாகத் தவறுதலாகத் தந்து விட்டீர். அதற்காகத்தான் நிற்கின்றேன்.

சீ கழுதை! ஏது மூளைகீளை சரியாக இல்லையோ. நான் தானே ஒரு அணா தந்தேன்; என்ன சங்கதி.

இல்லைங்க ஐயா! கால் ரூபாய் கொடுத்துவிட்டீர். இதோ பாருங்கள். என்னமோ கவனமாகக் கொடுத்துவிட்டீர். நான் பரம ஏழையாக இருந்தாலும் பிறர் சொத்துக்கு ஆசைப்பட மாட்டேன். போன ஜென்மத்தில் யாரை மோசஞ் செய் தேனோ? என்ன பாவஞ் செய்தேனோ? இப்படி இந்த அகத்திக்

கீரையைத் தலையில் சுமந்து தெருத் தெருவாக அலைகின்றேன். இப்பொழுதும் பாவஞ் செய்தால் மறுபிறப்பிலும் இப்படித் தானே அலையவேண்டும். அப்படித்தான் தப்பான வழியில் பணத்தைச் சேர்த்தால் நாளைக்குச் செத்தால் கூட வருவது ஒன்றுமில்லையே? இன்றைக்கிருக்கின்றவன் நாளைக்கு இல்லை. இந்த அற்ப வாழ்வைப் பெரிதாக எண்ணி மோச நாசம் செய்யக்கூடாது. நீங்கள் பிறகு கணக்குப் பார்க்கின்றபோது மூன்றணு குறைவதைக் கண்டு உங்கள் மனந் திடுக்கிடுமே? பிறர் மனந் திடுக்கிட்டால் எனக்கு நற்கதி வருமா? நியாயமான சம்பாதனையே நிற்கின்றதில்லை. அநியாயமான சம்பாதனை எங்கே நிலைக்கப்போகின்றது? அதற்காகத்தான் உங்கள் பணத்தை உங்களிடம் தருவதற்காக நிற்கின்றேன்'' என்று கூறி மூன்றணுவைத் தந்துவிட்டு, கிழிந்த தனது துணியை இழுத்துக் கட்டிக்கொண்டு, ஒட்டிய வயிறும் மெலிந்த உடம்பும் உள்ள அப் பரம ஏழை அகத்திக்கீரைக் கட்டை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு, "அகத்திக் கீரை'' என்று கூவிக் கொண்டு நடந்தான்.

மூன்றணுவை வாங்கி கார்த்திகேயன், திண்ணையில் உள்ள தூணமீது சாய்ந்து அப்படியே நின்றான். கீரை விற்கின்ற அந்த ஏழையை உற்று நோக்கினான். வள்ளியம்மை தயிர்க் காரியிடம் கூறிய அறமொழிகளையும், அவள் வாழ்த்திய வாழ்த்துரைகளையும், கீரை விற்கின்றவன் கூறிய திருமொழிகளையும் ஒருசேர வைத்து உன்னினான். கீரை விற்பவனுக்குள்ள நற்குணத்தையும் தனக்குள்ள துற்குணத்தையும் சீர் தூக்கிப் பார்த்தான். தனது மதியை நொந்தான். மனம் வெந்தான். வள்ளியம்மை ஊன்றிய தரும வித்து, கீரை விற்பவன் ஊற்றிய தண்ணீரால் வளர்ந்தது. கார்த்திகேயன் உள்ளமாகிய நிலத்தில் சிறிது நேரத்துக்குள் அந்த நியாயமாகிய மரம் விண்ணளாவ ஓங்கிப் படர்ந்து தழைத்தது.

பெட்டியைத் திறந்து, பதினாயிரம் நோட்டுக்கட்டை எடுத்துக்கொண்டு பாங்கியை நோக்கி நடந்தான். காஷியர் பாங்கு ஏஜண்டினிடம் பேசிக்கொண்டிருப்பதாகத் தெரிந்து அந்த அறைக்குச் சென்றான். "நேற்று நீங்கள் தவறுதலாக இந்த நோட்டுக் கட்டைத் தந்துவிட்டீர். இந்தாருங்கள்''என்று எடுத்து மேஜைமேல் வைத்தான். காஷியருக்கு மாண்டவுயிர் மீண்டது போல் இருந்தது. "என் தாயே! வள்ளி நாயகி!

தணிகை அன்னைப் பத்து

[திருவாசகத்து அன்னைப் பத்தைத் தழுவியது]

தணிகை மலையினர் தாரணி மார்பர்
மணிகை யுடையவர் அன்னே யென்னும்
மணிகை யுடையவர் வள்ளியை நாடி
வணிகராய் வந்தனர் அன்னே யென்னும். 1.

வள்ளி கணவரவ் வானவர் காவலர்
புள்ளி மயிலினர் அன்னே யென்னும்
புள்ளி மயிலினர் பூதலத் தேவந்தென்
உள்ளங் கவர்ந்தனர் அன்னே யென்னும். 2.

சிந்தைக் குகந்தவர் செங்கோட்டு வேலவர்
கந்தக் குருமணி அன்னே யென்னும்
கந்தக் குருமணி காலைத் தொழவினைத்
தொந்தத் தொடரறும் அன்னே யென்னும். 3.

உன்கருணையே கருணை" என்று வாய்விட்டுக் கூறினார். கார்த்திகேயனை நோக்கி "ஐயா! இக்கலியுகத்தில் இப்படி ஒரு உத்தம குணசாலியும் இருக்கின்றாரா? ரூபாய் பதினாயிரத்தைக் கொணர்ந்து தந்து ஏழைக் குடும்பத்தைக் காப்பாற்றினீரே! என் அன்னை வள்ளியம்மைதான் இதற்குக் காரணம். ஆகா! என் அன்னை வள்ளி என்னைக் காப்பாற்றினாள்" என்றார்.

கார்த்திகேயன் "ஐயா! என் மனைவி வள்ளியை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான். "ஐயா! தங்களையும் தங்கள்மனைவியையும் எனக்குத் தெரியாது; என் தாய் வள்ளி பிராட்டியை நான் இரவெல்லாம் வேண்டினேன். அந்தப் பராசக்தி அருள்புரிந்தாள்" என்றார் குமாரசுவாமி.

கார்த்திகேயன் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, மனவாக்குக்கெட்டாத தெய்வத்தை ஒருவன் நினைப்பானாயின் அது மனிதவுருவில் புகுந்து அருள் செய்யும் போலும். ஆகா! என்ன அதிசயம். அவர் அன்னை பராசக்தி வள்ளி நாயகியை வேண்டினால், என் மனைவி வள்ளியினுடைய நியாயமொழியால் யான் திருந்தி அவருடைய துன்பத்தைத் தீர்த்தேன்" என்று வியந்தான். தன் செல்வத்தில் ஒரு பாதியை வள்ளியம்மை பேரால் ஒரு பெரிய கல்லூரியைக் கட்டி நல்வழியில் நின்றான்.

கொங்கே நிறைதணிக் குன்றிடை வாழ்பவர்
எங்கே ஒளிக்கின்றார் அன்னே யென்னும்
எங்கே ஒளித்தாலும் *என்னை மறந்துழி
இங்கே உளனென்பர் அன்னே யென்னும். 4.

பண்ணுக் குடையவர் பாட்டுக் குருகுவர்
கண்ணுக் கினியரால் அன்னே யென்னும்
கண்ணுக் கினியரென் காட்சியிற் பட்டதும்
உண்ணெக் குருகுவேன் அன்னே யென்னும். 5.

ஆறு திருமுகம் ஆறு திருப்பதி
ஆறு திருவெழுத் தன்னே யென்னும்
ஆறு திருவெழுத் தாலென் வினைத்தொகை
நீறு படும்படும் அன்னே யென்னும். 6.

ஆற்றிலே தோற்றிய ஐயர் எனதுள்ளே
தோற்றம் அளித்தனர் அன்னே யென்னும்
தோற்றம் அளித்தென்னுட் சோபித் திருப்பதால்
கூற்றங் கலங்குமால் அன்னே யென்னும். 7

வேடர் மகளையும் வேழ மகளையும்
கூடி மகிழ்வரால் அன்னே யென்னும்
கூடி மகிழ்பவர் என்னையுங் கூடிட
நாடி வருவரோ அன்னே யென்னும். 8.

அந்தப் புகழ்சொல் அருண கிரிக்குமுன்
சந்தம் அளித்தனர் அன்னே யென்னும்
சந்தம் அளித்தவர் சார்பலாற் சார்பிலை
இந்த உயிரினுக் கன்னே யென்னும். 9.

அத்தர் அறுமுகர் ஆனந்தக் கூத்தரென்
சித்தத் திருக்கின்றார் அன்னே யென்னும்
சித்தத் திருந்தேனைச் செந்நெறிக் கேசெல்ல
வைத்துக் களிக்கின்றார் அன்னே யென்னும். 10.

வேலு மயிலுந் துணை

—வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

---

*யான், எனது அற்ற பொழுதில்.

உ
முருகா

அதனை இங்கு அனுப்பு

மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்களைத் தமிழகத்தில் அறியாதார் அறியாதாரே. அவர் சிறந்த தமிழறிஞர்; தெய்வ பக்தி நிறைந்தவர்; சமரசமான உள்ளம் படைத்தவர்; தேனினும் இனிய செந்தமிழ்ப் பாடல்களை விரைவாகவும் செம்பாக மாகவும் பாடுவதில் வல்லவர். மகா வித்துவான் திரிசிரபுரம் மீனுக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள், கோபாலகிருஷ்ண பாரதியவர்கள், திருவையாறு தியாகையரவர்கள், இராமலிங்க அடிகள், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள், வேதநாயகம் பிள்ளையவர்கள் இவர்கள் எல்லோரும் ஒருகாலத்தில் இருந்தவர்கள். அந்தக்காலம் தமிழ்த் தாயின் தண்ணொளி எங்கும் நன்கு ஒளிர்ந்தது.

வேத்நாயகம்பிள்ளையின் வாக்கு மிகவும் நயமானது. சமரசக் கீர்த்தனை, நீதிநூல், பிரதாப முதலியார் சரித்திரம் முதலிய அவருடைய நூல்கள் தமிழகத்தில் என்றும் குன்றாத பெருமையுடையவை.

அவர் காலத்தில் திருவாவடுதுறையில் சிவஞான பீடத்தில் அமர்ந்து அருளாட்சி செலுத்திய ஞானகுரு, மேலகரம், ஸ்ரீலஸ்ரீ.சுப்ரமண்ய தேசிகர் அவர்கள் ஆவார்கள். தேசிகர் சிறந்த சீலம் உடையவர்கள். உயர்ந்த சமயஞானமும் தமிழறிவும் நிறைந்தவர்கள். தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரித்து வந்தார்கள். அவர் காலத்தில் ஆதீன வித்வானுக இருந்து மகா வித்வான் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் தமிழை நன்கு வளம்பெறச் செய்தார்கள்.

மாயூரத்தில் நீதிபதியாக இருந்த வேதநாயகம்பிள்ளையவர்கள், ஞானமூர்த்தியாகிய மேலகரம் சுப்ரமண்ய தேசிகர் அவர்களைக் காண வேண்டும் என்று விரும்பினுர். திருவாவடுதுறைக்கு வந்தனர். தேசிகர் வேதநாயகம் பிள்ளையை வரவேற்று அவருடன் நன்கு நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். தேசிகர் ஞானமூர்த்தி; பிள்ளை தமிழ்க் களஞ்சியம்; இருவருங் கூடினுல் என்ன பேச்சு நிகழும்? தமிழின் தகைமை பற்றியும், இலக்கியங்களின் இனிமை பற்றியும் மொழிக்கு மொழி தித்திக்கப் பேசினுர்கள். புலவர்களோடு பேசும்போது உண்டாகின்ற இன்பத்திற்கு இணை சுவர்க்கத்திலும் இல்லையன்றே?

XV 10

உ

முருகா

சொல் வன்மை

வில்வன்மையிற் பெரியவர் இராமர்; அர்ச்சுனர் வில் வன்மையால் பலரை வென்றனர். வில் வன்மையிலும் மிகச் சிறந்தது சொல்வன்மை. வில்வன்மையின் மிக்க இராமரை சொல்வன்மையின் மிக்க அநுமான் மயக்கிவிட்டான்.

முதன் முதலாக அநுமானை இராமர் ரிஸ்யமூகமலையில் சந்தித்தனர். "அப்பா நீ யார்?" என்று வினவினர். அந்த ஒரு வினவுக்குமட்டும் விடை கூருமல் இனி கேள்விக்கே இட மில்லாதபடி பல வினுக்களுக்கு விடை பகர்கின்ருர் ஆஞ்ச நேயர். "என்ன வேலை? யாரிடத்தில் வேலை? ஏன் இங்கு வந்தாய்? உன் எஜமான் யாவன்? அவர் யாருடைய குமாரன்?" இப்படியே தொடர்ந்து இராமர் கேட்க வேண்டிய கேள்வி

வேதநாயகம் பிள்ளை அன்று பகல் முழுவதும் மடத்தில் தங்கினர். மாலை நேரத்தில் தேசிகரிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டு, தனது வண்டியில் புறப்பட்டு மாயூரம் வந்து சேர்ந்தனர். மேலகரம் சுப்ரமண்ய தேசிகர் அவர்களைப் பிரிந்து வந்ததற்குப் பெரிதும் வருந்தினர்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

என்ற திருக்குறளை நினைவுகூர்ந்தனர். மறுநாள் பகல் முழுவதும் தனது உத்யோக வேலை ஓடவில்லை. முக்கியமான பொருள் ஒன்றை மடத்தில் வைத்துவிட்டு வந்ததனுல் ஒன்றிலுமே ஓடவில்லை. ஒன்றையுஞ் செய்யமுடியவில்லை. என் செய்வார் பாவம்! திகைப்பூண்டு மிதித்ததுபோல் திகைத்தார். எப்படியோ இப்படியும் அப்படியுமாக அன்று பொழுது கழிந்தது. மாலை வந்ததும் வீட்டிற்கு வந்தார். ஒரு கடிதம் எடுத்து, மடத்தில் தேசிகரிடம் வைத்துவிட்டுவந்த பொருளைத் திருப்பியனுப்பிவைக்குமாறு ஒரு பாடல் எழுதி, ஒரு ஆள் மூலங் கொடுத்து அனுப்பினர். அந்தப் பாடல் அடியில் எழுதியிருக்கின்றது. பார்த்து மகிழுங்கள்.

சூர்வந்து வணங்குமேன்மை சுப்பிர மணியத் தேவே
நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றி ராத்திரியே மீண்டு
ஊர்வந்து சேர்ந்தேன் எந்தன் உளம்வந்து சேர வில்லை
ஆர்வந்து சொலினும் கேளேன் அதனை இங் கனுப்பு வாயே.

களை யெல்லாம் கேட்கு முன்னரே அறிந்து விடை பகரும் அனுமானுடைய சொல்வன்மை பெரிதா? இராமருடைய வில் வன்மை பெரிதா? ஆஞ்சநேயர் கூறிய விடைகள் இதோ வருகின்றன படித்துப் பாருங்கள்.

மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தனையசெய்ய கண்ணயான் காற்றின்வேந்தற்
கஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அநுமன் என்றான்.

இம்மலை யிருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல்செய்வேன் தேவநும் வரவு நோக்கி
விம்மலுற் றனையனேவ வினவிய வந்தேன் என்றான்
எம்மலைக் குலமுந் தாழ இசைசுமந் தெழுந்த தோளான்.

இந்த அருமையான சொல்வன்மையை நோக்கிய இராமர் அதிசயமுற்றனர். அறிவிலே சிறந்த இளையவனை நோக்கி, "தம்பி! இவன் பேசும் பேச்சுவன்மையை உற்றுநோக்கினாயா? ஆ! ஆ!! என் உள்ளம் உருகுகின்றது; இவன் கல்லாத கலைகள் ஒன்றும் எங்கும் இரா. ஏன்? இவன சொல் வன்மையால் இதை நான் அறிகின்றேன். இவன் என்ன வேதத்துலே வல்ல வாணிகேள்வனோ? கல்லாலின் புடையமர்ந்து நால்வர்க்கு எல்லாமாய் அலலவுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமல் சொன்ன செஞ்சடை மூர்த்தியோ? இந்த சொல்லின் செல்வன் யாவனோ?'' என்று வியப்புடன் கூறுகின்றார்.

இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்ற காட்சி
சொல்லாலே விளக்கிற்றன்றோ? யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளையவீர விரிஞ்சனோ விடைவலானோ.

வில்வன்மையிலே உயர்ந்த அர்ச்சுனர் சொல்வன்மையிலே சிறந்த கண்ணபிரானது உபதேசத்தைக்கேட்டு உள்ளம் உருகி உயர்வு பெற்றனர்.

சம்பந்த சரணாலயர் என்பவரை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர் கந்தபுராணத்தைச் சுருக்கமாகப் பாடியவர். சிறந்த புலமையுடையவர். தருமபுரம் ஆதீனத்தில் கட்டளைத் தம்பிரானாக இருந்தவர். பிறவி தொலையவேண்டும் என்ற ஏக்கமுள்ள துறவி. சொல்வன்மையுடையவர். இவர் ஒரு முறை மைசூருக்குச் சென்றிருந்தனர். அங்குள்ளவர்கள் இவ

ருடைய கவித்திறத்தை மிகவும் பாராட்டி நன்கு உபசரித் தார்கள். அப்போது மைசூரை அரசுபுரிந்துவந்த அரசர் செவிக்கு இவருடைய புகழ் எட்டியது. "அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்" அல்லவா? மன்னர்பிரான் மந்திரிகளையும் பல்லக்கையும் அனுப்பி இவரைத் தனது அரசவைக்கு வர வழைத்தான். புலவரை வரவேற்று ஆசனத்தில் இருத்தினான்.

சம்பந்த சரணாலயர் நல்ல கருப்பு. கருப்பு நிறம் என்றால் சிலருக்கு வெறுப்பு. சிவப்பு நிறம் என்றால் உவப்பு. இவ ருடைய கரிய நிறத்தைக் கண்ட மன்னருக்குச் சிரிப்பு வந்தது. அதை மெல்ல அடக்கிக் கொண்டார். அருகில் உள்ள அமைச் சர் ஒருவரை நோக்கி "சுவாமிகள் அண்டங்காக்கை போல் இருக் கின்றார்" என்று மெல்லக் கூறினார்.

சம்பந்த சரணாலயர் தன் நிறத்தைக் கண்டு மன்னர் சிறிது புன்னகை புரிந்ததையும் அமைச்சரிடம் கூறியதையும் எப்ப டியோ அறிந்துகொண்டார். எல்லோருங் கேட்குமாறு இனிமையும் கெம்பீரமும் நிரம்பிய குரலில், "மன்னர் பெரு மானே! நீர் வாழ்க. உமது அரசாட்சி வாழ்க. நீர் அண்டங் காக்கைக்குப் பிறந்தீர்; உமது பெருமை என்றும் ஓங்குக" என் றார். (அண்டம்—உலகம்) உலகத்தைக் காப்பதற்குப் பிறந்தீர்" என்ற பொருளில் "அண்டங்காக்கைக்குப் பிறந்தீர்" என்ற சொல்வன்மையைக் கண்ட மன்னர் திடுக்கிட்டார். அவருடைய அறிவின் திறத்தை நோக்கி வியந்தார். அவரை வணங்கினார். மிக்க அன்பு செய்தார். நிரம்ப ஆதரித்தார். எண்ணில்லாத பொன்னும் மணியும் பட்டு பீதாம்பரங்களும் காணிக்கையாகத் தந்தார். சம்பந்த சரணாலயர் அவருடைய சபையில் பல விரி வுரைகள் நிகழ்த்தி மன்னரை மேலும் மேலும் மகிழ்வித் தார். மன்னர் தந்த விலையுயர்ந்த பொருள்களை யெல்லாங் கொணர்ந்து தருமையாதீன குருமகாசந்நிதானத்தின் திருவடி யில் சேர்த்தனர்.

உ

முருகா

வளைந்தோர் உயர்வார்

வளைந்த பொருள்களுக்கு ஒருதனியான மதிப்பும் அழகும் உண்டாகின்றன. உயர்வு வளைவில் விளைகின்றது:

1. புருவம் நேராக இருந்தால் அழகாக இராது. வில்லைப்போல் வளைந்த புருவம் எத்துணை அழகாக இருக்கின்றது?

2. வளைந்த யாழில்தான் என்ன என்ன மதுரகானங்கள் எழுந்து செவியில் புகுந்து உள்ளத்தைக் கொள்ளுகின்றன.

3. மயிர் நேராக இருந்தால் அழகு செய்யாது; வளைந்து வளைந்து கடல் அலைபோல் சுருண்டு இருந்தால் அழகு செய்கின்றது.

4. நதி வளைந்து வளைந்து ஓடுகின்றபொழுது அழகாக விளங்குகின்றது.

5. பூத்து வளைந்த கொடிகளைக் கண்டு மகிழாதார் யார்?

6. ஒரு பெண் நெட்டையாக நின்றால் விகாரமாக இருக்கும். சிறிது இடையைச் சாய்த்து, தலையை வளைத்து நின்றால் பார்வதிதேவியையொத்திருப்பாள்.

7. நேராகத் தொங்கவிடும் பூமாலை அழகு செய்யாது; வளைத்துவிட்ட பூமாலை மிகுந்த அழகு செய்கின்றது.

8. இராகங்கள் நேராக ஆரோகண அவரோகணமாக ஏறி இறங்குவதைவிட, இடையிடையே வளைந்து வளைந்து சஞ்சாரஞ் செய்கின்ற போது உயர்ந்த இனிமையுண்டாகின்றது.

9. வளைந்திருக்கின்ற நடராஜமூர்த்தியின் குஞ்சித பாதம் அகிலலோகங்களையும் வாழ்விக்கின்றதன்றோ?

10. ஒரு கருத்தை நேர்முகமாகக் கூறுவதைவிட வளைத்து மறைமுகமாகக் கூறுகின்றபோது கருத்தின் உயர்வு தனிசிறப்பு அடைகின்றது.

அறிவில்லாத கீழ்மக்கள் நட்பு தீயது என்று கூறக் கருதினார் திருவள்ளுவர். ஆனால் அப்படிக் கூறினால் கேட்பவர் மனதில் ஆழமாகப் பதியாது. பொருள் சுவை கலந்து வளைத்துக்

கூறுகின்றார். "அறிவு ஒரு சிறிதும் இல்லாதவர்களுடைய நட்பு மிகவும் இனிமையானது". ஏன்? "அவர்கள் கூடிப் பிரியும்போது கவலையிராது. ஆதலின் தீயவர் நட்பு இனிமையானது" என்றார். எத்துணை இனிமை தருகின்றது இந்தத் திருக்குறள் என்று சிந்தியுங்கள்.

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.

இந்தப் பத்து எடுத்துக் காட்டுக்களால் வளைவின் உயர்வை ஒருவாறு சிந்தித்தோம்.

இனி இளமையில் சிறுவர்-சிறுமிகள், அடக்கமாகப் பணிவுடன் உடம்பாலும், உள்ளத்தாலும் தாழ்வு என்ற தன்மைக்கு உரைகல்லாக வளைந்து வளர்வராயின், (இப்படிக் கூறுவதனால் உடலைக் கூனலாக என்று கருதக் கூடாது) அவர்களது மேன்மை என்றென்றும் இமயமலை போல் நிமிர்ந்து நிற்கும். பணிவு என்ற ஒன்றே எல்லா நலன்களையும் தரும்.

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

என்ற திருக்குறளின் உயர்ந்த கருத்தை உன்னுக.

இளமையில் நன்றாக வளைத்துத் துன்புறுத்திய போது வளைந்த மூங்கில் அரசன் ஏறிவரும் பல்லக்கில், அம்மன்னனுடைய மணிமகுடத்திற்கு மேல் உயர்ந்து சிறப்புறுகின்றது. அவ்வாறு வளையாத மூங்கில், மூங்கிலை வீதியில் நட்டு வித்தை காட்டும் கூத்தாடியுடன் ஊர் ஊராய் அலைந்து, அவன் காலின்கீழ் மிதிபட்டு இழிவையடைகின்றது.

வருத்தவளை *வேய்அரசர் மாமுடியின் மேலாம்
வருத்தவளையாத மூங்கில்—தரித்திரமாய்
|வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாமுமவர் தம்மடிக்கீழ் தான்.

ஆதலின் இளமையில், பெற்றோரிடத்திலும் ஆசிரியரிடத்திலும் பணிவுடன் வளைந்து கல்விபயின்ற பிள்ளைகள் உலகம் போற்ற இன்புற்று உயர்ச்சியுறுவர். வீட்டிலும் வெளியிலும் வளையாமல் திரிந்த பிள்ளைகள், கல்வியறிவும் அதனால் எய்தும் நல்லொழுக்கமும் இன்றி வாழ்நாள் முழுவதும் துன்புற்று இகழ்ச்சியுறுவர்.

---

*வேய்—மூங்கில். |வேழம்பர்—கழைக்கூத்தாடி.

அறிவு

K. S. சுந்தரமூர்த்தி, புவனகிரி.

மனிதர் பிறந்து வளர்ந்து உண்டு உடுத்து உயிர்த்து உறங்கி தளர்ந்து ஒரு நற்கருமமும் புரியாமல் வறிதே இறந்து படுகின்றனர். மீண்டும் பிறந்து அவமே உழன்று அழிகின்றனர். பிறந்தும், இறந்தும் பயனற்றுப் போகின்றனர். இதை நினைக்கின் அறிவுடைய ஒருவனுக்கு உள்ளம் கவலுமன்றோ? பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியைப் பெற்று ஒரு பயனுமின்றி சாவதினும் மடமை வேறுளதோ? நீர்க்குமிழி போல் தோன்றி மறையும் நிலையில்லாத உலகவாழ்வைச் சதமென்று எண்ணி இறுமாந்து இறைவனை மறந்து, உலகில் இன்பம்போல் காணப்படும் செல்வம், மனைவி, மக்கள், உடம்பு ஆகிய துன்பத்தை, இன்பம், இன்பம் என்று ஏமாந்து நிற்கின்றனர். துன்பமானது இன்பம்போல் பொய்யாகக் காட்சி தருகின்றது.

உலகவாழ்வைப் பொய்யென்று தெரிந்து, உண்மை வாழ்வைப் பெறுவதற்கு ஒவ்வொருகணமும் மனிதனானவன் முயற்சி செய்யவேண்டும்.

எவனொருவன் அறிவை அறிகிறானோ அவனே இறைவனை அறிந்தவனாகிறான். அப்படியானால் அறிவை அறிவது எப்படி? அறிவு என்பது எது? என்ற கேள்வியை நம்மை நாமே கேட்போமானால் உண்மை விளங்கும். உதாரணமாக; ஒருவன் கவிதை இயற்றுகிறான். அதற்கு வேண்டிய ஓசையையும் கொடுக்கிறான். அதையே நாடகமாகவும் நடிக்கிறான்; அஃதாவது முத்தமிழையும் ஒருவன் தீர அறிகிறான். (ஆயினும்) அவனறிவது தன்னை வேறாயறிவதேயன்றி, தன்னையுள்ளவாறறியவில்லை. அஃதாவது எதிரிட்ட விடயஞானத்தை அறிகிறான். ஆகையால் அது உண்மை அறிவு ஆகாது. எப்படியெனில், இவன் கவிதை இயற்றுகிறான். அதற்குவேண்டிய ஓசை தருகிறான். அதையே நாடகமாகவும் நடித்துவிடுகிறான். இவன் செய்வதெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறதே ஒன்று, அதை இவன் அறியவில்லை. எல்லாம் தெரிந்துகொண்ட தன்னைத் தெரிந்து கொள்ளாமையால் இவன் அறிவது விடயஞானமேயன்றிப் பரஞானம் இல்லையென்பது தெரிகிறது. ஆன்றோரும்,

> "நவிலுகலை அறுபத்து நாலும் அறிவாரும்
> பவலயம் அறும்சுத்த பரமம் அறியாரே"

என்று கூறியுள்ளார்.

ஆதலின் உலகில் ஒருவன் சகல வித்தைகளையும் கற்றிருந்தும் அவனால் அறியமுடியாத அறிவை அறியவேண்டுமா

லல், மனம் ஒருமைப்படல்வேண்டும். உலகமாயையில் சுழன்று திரியும் இந்தமனத்தை ஒரு நிலையில் நிறுத்தவே, யோகம், தவம், உருவவழிபாடு இவைகளைச் செய்கின்றனர். அறிவாகிய இறைவனை அடையவேண்டுமானால், அவன் அருள் இருந்தால் தான் முடியும். அவன் அருள் ஒருவனுக்கு கிடைக்கவேண்டுமானால், ஒரேவழிதான் காணக்கிடக்கிறது. அதுவே உருவவழிபாடு. உருவவழிபாட்டினால் அறிவாகிய இறைவனை அடைய முடியுமா? என்றகேள்வி எழுகிறது. முடியும். எப்படியெனில்; அன்புமயமான இறைவனை அன்பாலேதான் அடையமுடியும். ஆதலால் அவன் வீற்றிருக்கும் ஆலயத்துள் செல்வோமாக.

அரசன், குரு. குழந்தை, இறைவன் இவர்களின் சமீபத்தில் வெறுங்கையோடு செல்லக்கூடாது. ஆதலால், கையில் தேங்காய், பழம், கற்பூரம் முதலிய பொருள்களைத் தமது சக்திக்குத் தக்கவாறு எடுத்துக்கொண்டு செல்கிறோம்.

தேங்காயை உடைத்து, கற்பூரத்தை ஏற்றுகிறோம். அப்பொழுது இறைவனுடைய தெரிசனத்தை நாம் பெறுகிறோம். அதேநிலையில், ஏன் தேங்காய்தனை உடைக்கிறோம், கற்பூரத்தை ஏன் ஏற்றுகிறோம், என்று சற்று சிந்தித்துப் பார்த்தோமானால் உண்மை விளங்கும்.

இறைவன் உயிர்கள் தம்மை வந்து அடையவே தேங்காய் என்ற ஒன்றை நமக்கு அளித்திருக்கின்றான். தேங்காய் நமக்கு எதைத் தெரிவிக்கின்றது என்று அறிவோம்.

தேங்காயானது வெண்மை நிறைந்து விளங்குகிறது. அந்தவெண்மையான தேங்காயை கடினமான ஓடு மூடிக்கொண்டு இருக்கிறது. மூடிக்கொண்டிருக்கும் ஓடுகளின்மேல் நார் இருக்கிறது. அதற்குமேல் மட்டை இருக்கிறது. அதாவது: தேங்காய் போன்ற உள்ளத்தை, ஓடுபோன்ற எலும்பானது மூடிக்கொண்டிருக்கிறது. அதற்கு மேல் நார்போன்றிருக்கும் தசைகளும், மட்டை போன்றிருக்கும் மேல்தோல்களும் மூடியிருக்கின்றன. ஆதலின், இந்த உண்மையை ஒருவன் நன்றாக உணர்ந்து, அஞ்ஞானத்தோலை உரித்து, பற்றுகிய தசைகளை நீக்கி, ஆணவமான எலும்பை உடைத்து, பரிசுத்தமான உள்ளத்தைப் பெற்று, கட்டியான வினையென்னும் கற்பூரத்தைத் தன் அறிவாகிய ஞானத்தினால் ஏற்றினால் அறிவை அறிந்த அறிவை உடையவனாகிறான். அவனே அறிவாகிய இறைவனை அறிந்தவனாகிறான். அவனே இப்பிறவி எடுத்த பயனை யுணர்ந்தவனாகிறான். அவனே தன்னையும், தன்னுள் உறையும் உத்தமனையும் அறிந்தவன். அவனுடைய அறிவே உண்மையான அறிவு.

Printed & Published by M. Madhusoodana Sivam at the Thiruppugal Amirtham Press, 144 Swaminaicken Street, Chindaripeta, Madras, Editor: Sri Kirupanandavari.

ஆஸ்திக அன்பர்களுக்கு விருந்து

முருகன் சம்பந்தமானதும் கற்கண்டுத் துண்டுக்கு சமமான நிகழ்ந்த பல அற்புத விஷயங்கள் அடங்கிய 5 புத்தகங்கள் (தபாற்செலவு உட்பட) ரூ. 1-4-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். தெய்வமில்லை யென்று பேசுவோர் இப் புத்தகங்களைப் படித்துப் பதில் சொல்லவும்.

ஆ. சுப்பிரமணிய நாயகர், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-12.

வரப்பெற்றோம்

1. **மாணவர் திருக்குறள்:** (50 குறளுக்குப்) பதவுரை கருத்துரையுடன் கூடியது. ஆறும் வகுப்புக்குரியது. நூலாசிரியை: டாக்டர் A. G. கோமதி அம்மாள் L. M. P. கணபதி விலாஸ், கோவில்பட்டி. விலை அணு 6. (ஆசிரியைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.)

2. **சூக்ஷுத்தில் மோக்ஷ ரகசியம்:** வெடியங்காடு மா. சி. முனிவேல் சுவாமி அவர்கள் எழுதியது. விலை. ரூ. 1—0—0 கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மா. சி. முனிவேல்சுவாமி, வெடியங்காடு, சித்தூர் ஜில்லா.

எமது புதிய வெளியீடு

சத்தியஞான சபைத் தூபி நீராட்டு விழா நினைவுமலர்

இது மிகவும் சிறந்த நூல்; சத்திய ஞான சபையின் அமைப்புக்களின் தத்துவங்களைக் கூடுமானவரை விளக்கித் திருவருள் துணைகொண்டு எழுதப்பெற்றது. ஞானசபையில் கருங்கல்லில் பொறித்துள்ள இனிய திருவருட்பாக்களையும், அருட்பெருஞ் ஜோதி அகவலையும் இதில் யாவரும் படித்துப் பயன் பெறும் பொருட்டு வெளியிடப்பட்டது. அமிர்தம் சந்தாதாரர்கள் அனைவரும், மற்றவரும் தவறாது, இந்த உயர்ந்த நூலை வாங்கிக் கருத்தூன்றிப் படித்து நன்மை யடைவார்களாக.

விலை ரூ. 1-0-0, தபாற்செலவு 0-5-6.

உ

முருகா

காங்கேயநல்லூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில்

ஸ்கந்தஷஷ்டி லக்ஷார்ச்சனை

(ஆறுவது ஆண்டு)

எல்லா நலங்களையும் எய்தி இருநிலத்தில்
உல்லாச மாக உயர்வடைவர்—நல்லார்வாழ்
காங்கேய நல்லூர்வாழ் கந்தவேள் பொன்னடியைப்
பாங்காகப் போற்று பவர்.

மெய்யன்புடையீர்!

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு, அண்ணலும் அதுகண்டு அருள் செய்யா நிற்கும்" என்ற தமிழ் மறையின்படி இறைவனைப் பல மலர்கள் இட்டு வழிபடுதல் வேண்டும். லட்சார்ச்சனை மிகவும் சிறந்த வழிபாடாகும். அதன் சிறப்பைத் திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுமாறு காண்க.

பூவ னூர்ப் புனிதன் திருநாமந்தான்
நாவில் நூறு நூறுயிரம் நண்ணினர்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே.

ஆதலின் கந்தர் சஷ்டியின்போது ஆறுமுகப் பெருமானுடைய ஆறு திருமுகங்களுக்கும் ஆறு நாட்களிலும் ஆறு சிவாச்சாரியர்கள் 18 காலங்களில நூற்றெட்டு ஆயிரம் மந்திரங்களைக் கூறி, ஆறுவகை மலர்களினுல் அர்ச்சிதது, வழிபட ஏற்பாடு செய்துளது. அன்பர்கள் அனைவரும் இப்பெரும் புண்ணியத்தில் பங்கெடுத்துக் கொள்வார்களாக; முருகவேள் முழுமுதற் கருணை முன்னின்று துணைபுரிக.

9-11-50 வியாழக்கிழமைமுதல் *14-11-50* செவ்வாய்க்கிழமைமுடிய

14—11—50 செவ்வாய்க்கிழமை ஸ்கந்தஷஷ்டி.

காங்கேயநல்லூர்
15—9—50

திருப்புகழ்ச் சபையார்.

குறிப்பு:—இவ்வாண்டு இலக்ஷார்ச்சனையில் பங்கெடுத்துக் கொள்ள விரும்பும் அன்பர்கள் அருச்சனை ஒன்றுக்கு ரூபாய் ஆறு வீதம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுகின்ரும். தபால் மூலம் பணம் அனுப்ப விரும்பும் அன்பர்கள் 'திருப்புகழமிர்தம் ஆபீஸ்' *144*; சாமிநாயகன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. என்னும் விலாசத்திற்கு *8—11—50*க்குள் சேருமாறு அனுப்பித்தர வேண்டுகின்ரும். சென்னையிலுள்ள அன்பர்கள் திருப்புகழமிர்தம் காரியாலயததில் நேரே செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

சென்ற விரோதி ஆண்டு இலக்ஷார்ச்சனையில் பங்கெடுத்துக்கொண்ட

அன்பர்களின் பெயர்கள்

காங்கேயநல்லூர்

1 மல்லையதாஸ் பாகவதர்
2 ம. கோடிலிங்கம்
3 த. க. ஆறுமுக முதலியார்
4 த. பெ. ராமசாமி முதலியார்
5 திமிரி. ஷண்முக முதலியார்
6 ச. மு லோகநாத முதலியார்
7 A.S. சுப்பிரமணிய முதலியார்
8 ம.அ. ராமச்சந்திரன்
9 K. குள்ளப்ப முதலியார்
10 அ.மு.மார்க்கபந்துமுதலியார்
11 பாலாத்த முதலியார்
12 சி. பெரியபபா முதலியார்
13 S. நாராயணசாமி நாயக்கர்
14 K. மாணிக்க முதலியார்
15 A. ஏகாம்பர முதலியார்
16 பி.வி. வேலுமுதலியார்
17 வேணுமுதலியார்
18 M. கந்தசாமி முதலியார்
19 த. நா ஏகாம்பர முதலியார்
20 அப்பாசாமி முதலியார்
21 ச மு. குருமூர்த்தி
22 பு.மு. புருஷோத்தம முதலியார்
23 C. வெங்கடவரதாச்சாரி
24 V. K. குப்புசாமி ஐயர்

காட்பாடி

25 S. வைத்தியநாத சுவாமி ஐயர்
26 C. குப்புசாமி முதலியார்
27 வெங்கட்டராமையர் (தாராபடவேடு)
28 T.R. ரங்கநாத ஐயர்
29 M. லக்ஷ்மிநரசிம்மம்
30 V. அருணாசலம்
31 K. கிருஷ்ணமூர்த்திராவ்
32 R. சுபபாராவ்
33 அம்மாக்கண்ணு அம்மாள்
34 மணி ஐயர்
35 க. ராஜாராம்
36 நாராயண சர்மா
37 K. சின்னப்பா முதலியார்
38 மதுரை முதலியார்
39 R.மாணிக்க செட்டியார்

வேலூர் N. A.

40 K.N. வெங்கட்டரமணராவ்
41 K. N. தாமோதரம்
42 V.M. கோவிந்தராஜ முதலியார்
43 K.H. பாலகிருஷ்ண ஐயர்
44 ஸ்ரீ பாலவிநாயகர் பஸ் சர்வீஸ் (6 சீட்டுகள்)
45 தியாகராஜ முதலியார்
46 V.P. பொன்னுசாமி முதலியார்
47 சிவகாமி அம்மாள்
48 V.S. சுப்பிரமணிய செட்டியார்
49 V. K தநுராம முதலியார்
50 V. A சுந்தரவேலு முதலியார்
51 V. B. சதாசிவ முதலியார்
52 P. ஜெயசீலன்
53 C. மோகன முதலியார்
54 ஆ.மு.சு. முனிரத்தின முதலியார்
55 V. K. தருமலிங்க முதலியார்
56 K. S. நடராஜ முதலியார்
57 கோபால் செட்டியார்
58 கன்னியப்ப செட்டியார்
59 சோ. க. கோ. அண்ணாமலை செட்டியார்
60 கோ. ராமலிங்க செட்டியார்
61 A. சுப்பிரமணிய ஐயர்
62 C. G. ராஜன்
63 K. S. ஏழுமலைப் பிள்ளை
64 V. K. P. வடிவேலு நாட்டார்
65 துரைசாமி செட்டியார்
66 பெருமாள்சாமி முதலியார்
67 தெ. பு. முருகேச செட்டியார்
68 R. சொக்கலிங்கம் செட்டியார்
69 மார்க்கசகாய நாட்டார்
70 V. R. சுப்பிரமணிய ஸ்தபதி
71 V. M. பாலகுருநாத செட்டியார்
72 ஜெ. துரைசாமி செட்டியார்
73 N. ஆனந்தகிருஷ்ணன்செட்டியார்
74 M G. R. ரங்கசாமி நாயகர்
75 K. ரத்தின செட்டியார்
76 R. கோவிந்தராஜ நாயுடு
77 V. R. ரங்கநாத முதலியார்
78 K. G. ஆறுமுகம்

79 V. D. நரசிம்ம செட்டியார்
80 M. சொக்கலிங்க செட்டியார்
81 M. S. சீனிவாச செட்டியார்
82 V. K. வேலாயுதம் பிள்ளை
83 குப்புசாமி செட்டியார்
84 N. கிருஷ்ணசாமி நாயுடு
85 N. குருசாமி நாயுடு
86 சிட்டிபாபு
87 சுந்தரம் நாயுடு
88 விஸ்வநாதன் நாயுடு
89 ஞானம்பாள்
90 முருகன்அருள்
91 M. மார்க்கபந்து செட்டியார்
92 R. தங்கசாலே செட்டியார்
93 கணியம்பாடி சீதாராம முதலியார்
94 ரங்கநாத ராவ்
95 K. V. பரமேஸ்வர ஐயர்
96 V. K. R. ஷண்முக முதலியார்
97 சங்கரையர்
98 A. S. K. காசி விஸ்வநாதன்
99 அண்ணாமலைச் செட்டியார்
100 வேதகிரி ஆச்சாரி
101 சோ. க. பரசுராம செட்டியார்
102 சு. பாலசுந்தர முதலியார்
103 சு. ராமலிங்க முதலியார்
104 K. சதாசிவ முதலியார்
105 அருணகிரி முதலியார்
106 பட்டம்மாள் (வேலப்பாடி)
107 பரமசிவ செட்டியார்
108 V. B. ஏகாம்பர முதலியார்
109 தத்தாத்ரேய முதலியார்

பிரம்மபுரம்

110 S. ரங்கநாத பிள்ளை
111 B. M. கண்ணப்ப பிள்ளை
112 சோமசுந்தர முதலியார்
113 A. ஜம்புலிங்கம்
114 சுப்பிரமணிய முதலியார்
115 கிருஷ்ணசாமி பிள்ளை
116 சுப்பிரமணிய உடையார்
117 E. R. சுப்பராவ்
118 B. M. பாலசுந்தர முதலியார்

ஜமால்புரம்

119 ரா. நாராயணசாமி முதலியார்
120 முனிசாமி முதலியார்
121 ராமலிங்க முதலியார்
122 ராமசாமி முதலியார்
123 ஜானகிராம் பிள்ளை, நெல்வாய்
124 க.ஆ.எ.கு. மார்க்கபந்து செட்டியார், ஆற்காடு
125 கொ.மு. சொக்கலிங்க முதலியார், திமிரி
126 ஆற்காடு சாலம்மாள்
127 நடேச முதலியார், செண்டத்தூர்
128 கு. கந்தசாமி முதலியார், கொடக்கல்

கவசம்பட்டு

129 காமகோடி முதலியார், கீழூர்
130 கோவிந்தராஜ முதலியார், மேலூர்
131 காந்தாமணியம்மாள்
132 பா. நடேச முதலியார், கீழூர்
133 சுந்தரேச முதலியார் ஷை
134 கண்ணம்மாள் ஷை
135 லக்ஷ்மண முதலியார் ஷை
136 மணிவாசக முதலியார் ஷை
137 ம. பாண்டுரங்க செட்டியார் போளூர்
138 H.S. கேசவமூர்த்தி, குடியாத்தம்
139 திருப்புகழ் சபை, வளைகுளம்
140 திருப்புகழ் சபை, மின்னல்
141 நரசிம்ம ஐயர், வெடியங்காடு

சென்னை

142 S. முத்துசாமி ஐயர்,
143 ஆறுமுகம் (ஆ. கோ.)
144 ல.ப. முத்துசாமி முதலியார்
145 T.S. முத்துகுமாரசாமி செட்டியார்
146 சுப்புலக்ஷ்மியம்மாள்
147 வ.ரு. புருஷோத்தம செட்டியார்
148 வே. சிவகுரு முதலியார்
149 N.S. பினாகபாணி
150 G. சந்திரகாசன்
151 P. சீனிவாசன்
152 N. நடராஜன்
153 ச. மாணிக்க செட்டியார்
154 அ.கு. பாண்டுரங்கம்
155 M. லக்ஷ்மணன்
156 M.R. சண்முக முதலியார்
157 T.A. சுப்பிரமணிய முதலியார்
158 V.R. பீதாம்பரம்
159 ந. ல. இரங்கநாதம் பிள்ளை பெரம்பூர்
160 ந. சாரங்கபாணி பிள்ளை ,,

161 A.N. ஜயலக்ஷ்மியம்மாள்
கோடம்பாக்கம்
162 R.M. சிவராஜ முதலியார்
ஆலந்தூர்
163 ஓ. தியாகராய முதலியார்
பாக்கம்
164 கா.பொ.கன்னியப்பசெட்டியார்
165 ந. ராமசாமி முதலியார்
மேல்பட்டாம்பாக்கம்.
166 சிவசிதம்பர முதலியார்
நத்தமேடு
167 K.S. முத்துசதாசிவ முதலியார்
கல்யாணம்பூண்டி
168 நா.சோ.மாணிக்க முதலியார்
சிதம்பரம்
169 Dr. T.S. விஸ்வநாத ராவ்
திருப்பாலைக்குடி
170 R. சுந்தரராஜன் பிள்ளை
தேவன்குடி
171 சோ. வீரப்பபிள்ளை கபிஸ்தலம்
172 சு.ப. சோமசுந்தரம் பிள்ளை
நெடுங்காடு

திருச்சி

173 ந. சு. கணபதியா பிள்ளை
174 சு. மாணிக்கம் செட்டியார்
175 S. K. நடேச பிள்ளை
176 T. M. கனகசபாபதி பிள்ளை
177 தி. மு. சுப்பையா பிள்ளை
178 ஆ. பொன்னுசாமி பிள்ளை
179 ஆ. பொ. ஷண்முகநாதன்
180 இ. முத்துப் பிள்ளை

உறையூர்

181 R. P. சாமிக்கண்ணு பிள்ளை
182 பி.வி.ஜெ. முனுசாமிசெட்டியார்
183 P. N. அங்கைய செட்டியார்
184 ஆ. சி. லிங்கையன் செட்டியார்
185 க. ரெ. வரதராஜுலு
செட்டியார்
186 பு.மு. வேலாசாமி செட்டியார்
187 ப.ராம. சுப. சுப்பிரமணியன்
செட்டியார், தென்னூர்
188 L.S.சொக்கலிங்கம் செட்டியார்
லால்குடி
189 மு. சுப்பிரமணியன் செட்டியார்
பூவாளூர்
190 சா. பழநியப்பன் பூவாளூர்
191 அ. நமசிவாயம் செட்டியார்
பூவாளூர்
192 சா. ராஜு முத்திரியர்,
பல்லவபுரம்
193 K. S. பழனிச்சாமி, கா பனப்
பாளையம்
194 திலகவதி, துறையூர்

மதுரை

195 B. K. ராமச்சந்திரன்
செட்டியார்
196 சண்முகவேல்
197 K. சுப்பிரமணிய ஐயர்
198 ஆ. சுப்பையா முதலியார்
199 பெருமாள் செட்டியார்
200 சௌந்தரபாண்டியன் சேர்வை
201 கா. பாண்டியன்
202 அ. முத்தையா செட்டியார்
203 ராமா. ம. ராமாநுஜம் பிள்ளை
204 P.S.S. நாராயணன்
205 மு.வெங்கடாசலம் செட்டியார்
206 நாகலிங்கம் செட்டியார்.
207 தப்பாளி ரெ. அலமேலு
அம்மாள்
208 பழநிச்சாமி பிள்ளை
209 தங்கவேலு பிள்ளை
210 கோ. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை
211 அன்பர்
212 T. ராம்சிங்கு
213 விசாகமூர்த்தி (ஜெ.மு.)
214 நாகரத்தினம்மாள்
215 சண்முகம் பிள்ளை
216 S.K. முத்துச்சாமி பிள்ளை
விரகனூர்
217 க. குப்புசாமி கவுண்டர்
பூலாம்பட்டி
218 A. சுப்பிரமணியன்,
போடிநாயக்கனூர்
219 பெரி. சித. ராம. ராமசாமி
செட்டியார், பலவான்குடி
220 செ. முத்துச் செட்டியார்,
திருபுவனம்

திருநெல்வேலி

221 P. ஸ்ரீனிவாசையர்
222 சரவணபவன் பிள்ளை
223 சுடலைமணி
224 செல்லையா
225 L. செல்லையா பிள்ளை
226 சண்முகவேல் செட்டியார்
227 கந்தசாமி மூப்பனார்
228 அண்ணாமலை மூப்பனார்

229 தாயுமான சுந்தரம் பிள்ளை
230 ஐயப்பன் (செல்லையா)
231 ஆண்டியப்பன்
232 மீனாட்சிசுந்தரம் பிள்ளை
233 கு. சிவனடியான் பிள்ளை
234 காந்திமதிநாதன் (கிருபாநிதி)
235 சங்கரசுப்பையா முதலியார், அம்பாசமுத்திரம்

கோயம்புத்தூர்

236 B. பொன்னுசாமி செட்டியார்
237 J. V. சுப்பிரமணிய செட்டியார்
238 S. R. P. ரங்கைய செட்டியார்
239 ஆதிநாராயண செட்டியார்
240 அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார்
241 ம. தி. ராமாத்தாள்
242 ம. தி. குப்பம்மாள்
243 C. B. முத்துச்சாமிசெட்டியார் (2)
244 R. நாராயணசாமி செட்டியார்
245 C. K. ராமசாமி பிள்ளை
246 M. நடேசம் பிள்ளை
247 K. கிருஷ்ணைய செட்டியார்
248 A. K. கிருஷ்ணையர்
249 S. நாகமாணிக்கம்
250 L. வெங்கிடசாமி செட்டியார்
251 M. சொக்கலிங்கம் சசெட்டியார்
252 P. மருதாசலம் செட்டியார்
253 C. கருப்பண்ணசாமி
254 S. R. ஐயர் & சன்
255 P. ஜனார்த்தன செட்டியார்
256 K. M. V. வஜ்ஜிரவேல்
257 R. V. கோனைய செட்டியார்

பீளமேடு

258 R. செந்தில
259 R. ராமகிருஷ்ணன்
260 P. M. ராமசாமி
261 R. ரெங்கையன்
262 P. K. தாமோதரசாமி நாயுடு
263 P. N. ஜகந்நாதன்
264 R. P. ஜகந்நாதன்
265 S. தியாகராஜன்
266 G. பாலகிருஷ்ணன்
267 G. கோபால் செட்டியார்

பொள்ளாச்சி 6 சீட்டுகள்

268 K. சொக்கைய மன்றாடியார்
269 S. S. மணி, கள்ளிக்கோட்டை
270 P. R. K. சிவம், பல்லடம்
271 K. N. பாலமுனியப்ப செட்டியார், சத்தியமங்கலம்
272 G. R. முருகேசன், கோபிசெட்டி பாளையம்
273 வ. குமாரசாமி, கொமரலிங்கம்
274 S. V. ராமசாமி செட்டியார், கொடுமுடி
275 R. பாலசுப்பிரமணிய செட்டியார் சேலம்
276 ஏ. கோ. மாதையசெட்டியார் ,,
277 K. C. நடேச கண்டர் கொமாரபாளையம்
278 K. M. மாகாளிக் கண்டர் ஷை
279 S. தங்கவேல் ஐயர், தலைவாசல்
280 C. முத்துச்சாமி ஆத்தூர் சேலம்

மோகனூர்

281 ப. கோபாலகிருஷ்ணன் செட்டியார்
282 P. V. N. நாச்சிமுத்து செட்டியார்
283 ரா. பழனியப்ப முதலியார் (2)
284 முருக முதலியார்
285 ஊ. மு. சந்தனம் பிள்ளை
286 ச. தனலக்ஷ்மி அம்மாள்
287 A. N. நவநீதம் அம்மாள், பெங்களூர்சிடி
288 R. சாமிநாத ஆச்சாரி ,, தண்டு
289 P. ஷண்முகமுதலியார் பம்பாய்
290 G. தங்கவேல், நைஜாமாபாத்
291 G. கற்பகவல்லிஅம்மாள் வர்தா
292 ஜெயவேலு முதலியார், புனா

மலேயா

293 S. சிவன் செட்டியார், ஊமுட்
294 அரு. சுப்பையாசெட்டியார் ஷை